
# திருக்கோயில்

செப்டம்பர் 1993 விலை ரூ. 3





மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்
திருவொற்றியூர் அருள்மிகு வடிவுடையம்மனுக்கு
வெள்ளி திருவாசி காணிக்கை செலுத்தி
விசேட வழிபாடுகள் நிகழ்த்தினார்கள்.

முகப்பு:
அருள்மிகு
சங்கரநாராயணர் திருக்கோலம்
சங்கரன்கோயில்.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை.
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை: 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஸ்ரீமுக ஆண்டு புரட்டாசி செப்டம்பர் 1993 விலை ரூ. 3-00 | மணி: 9

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் அனுபவம்
—திருமந்திரச் செம்மல் டி.வி.வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்..

வினையிருள் அகல
—வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.,

அருள்மிகு சங்கரநாராயணர் திருக்கோயில் தலவரலாறு
—திருக்கோயில் வெளியீடு

சுவாமி விவேகானந்தரும், நாட்டுவிழிப்புணர்வும்
—அருட்செல்வி

கீதைக்குறள்கள்
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

குலசேகரரின் கிருஷ்ணாநுபவம்
—திருக்குடந்தை சௌரிராஜ திருவேங்கடத்தான்

திருக்கண்டியூர் வீரட்டானம்
—கோயிற் கலைச்செல்வர் தி. ராசமாணிக்கம்

பெருமாயன்
—ஆர். பி. சாரதி

விநாயகரின் திருவிளையாடல்
—கணபதிப்பிரியா

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

தெய்வத்துணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்



# அருளாளர்களின் அருள் அனுபவம்

## திருமந்திரச் செம்மல்

## டி.வி.வெங்கட்ட்ராமன் ஐ.ஏ.எஸ்.



நம் தமிழக அரசின் தலைமைச் செயலாளர்
திருமந்திரச் செம்மல்

**திருமிகு டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள்**

**[25]**

### வென்ற ஐம்புலனால் மிக்கீர்

உயிர் வேறு, உடல் வேறு. ஆனால், மயக்கத்தால் உயிர் தன்னை உடலாக கருதிக் கொள்கின்றது. இந்த மயக்கத்தில் உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும், புலன்களும் உயிரை ஆட்டுவிக்கின்-றன. உண்மையில் உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் ஜடப் பொருள்களாகும். ஆனால், உயிர் அவ்வாறு நினைப்பதில்லை. இறைவனுடைய மறைக்கும் சக்தி இயங்குவதால் உயிர் தன்னைப் பற்றி உணர்ந்து கொள்ளாது தன்னை உடலாகவே உணர்ந்து கொள்கிறது. உடலும், உடலைச் சார்ந்த இந்திரியங்களும் புறப் பொருள்களை நோக்கிச் செல்கின்றன. புறப் பொருட்கள் இந்திரிய சேர்க்கையினால் உயிருக்கு அனுபவங்களைத் தருகின்றன. இந்த அனுபவங்கள் உடலின் கருவிகளின் இயக்கத்தை, ஆதிக்கத்தை வலுப்படுத்துகின்றன. புறப்பொருட்களும், இந்திரியங்களும், புலன்களும் ஒன்றை ஒன்று பந்தித்து உயிருக்கு ஒரு வித சிற்றறிவைச் சேர்க்கின்றன. உயிருக்கு இயல்பாக இருக்கின்ற அறியும் தன்மை புறப் பொருட்கள் வழியாக கிடைக்கும் அனுபவத்தை மட்டுமே நுகர்ந்து கொள்ள பயன் படுத்தப்படுகிறது.

ஐம்பொறிகளின் இயக்கம் காரணமாக மனதிலே ஆசை பிறக்கும். ஆசைகள் பாசத்திற்கு வித்திடும். பாசமானது உயிருக்கு இன்ப துன்பங்களைத் தருகின்றது. இன்பம் பெறும் பொழுது உயிர் மேலும் மேலும் இன்பம் பெற விரும்புகின்றது. துன்பத்தைக் குறைக்க முயலுகின்றது. இந்த முயற்சியில் உயிரானது ஈடுபடும்பொழுதெல்லாம் மேலும்மேலும் வினைப் பயன்களை கூட்டிக் கொள்கிறது. ஐம்பொறிகளைப் பயன்படுத்தி, மனம், புத்தி, சித்தம் போன்ற உட்கருவிகளை வேட்கையில் புகுத்தி, தான், தனது என்கிற நிலையில் உயிரானது தன்னை ஓர் முழுமைப் பொருளாகக் கருதிக் கொண்டு, மாயை என்கிற வட்டத்திற்குள் சுழன்று திரிகின்றது.

பாசத்தில் அழுந்திய உயிர் இந்த வட்டத்திலேயே தனது பணிகளை மேற்கொள்கிறது. வட்டத்தைச் சுற்றியுள்ள மாயைத் திரை ஒன்று வட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றை உயிரிடமிருந்து மறைக்கின்றது. அது மட்டுமல்ல உயிரானது வட்டத்திற்குள்ளே இருந்து கொண்டு தான் என்றும், தனது என்றும் இயங்குவதன் காரணமாக வினைக் கூட்டங்களைச் சேர்த்துவருகின்றது. உயிருக்கு இருப்பது சிற்றறிவு. சுட்டறிவுமாகும். தானே அறிந்துகொள்ளும் நிலையில் இல்லை. ஒருவன் அறிவிக்க அறிந்து கொள்ளும் நிலையில் உள்ளது. மேலும் அறியாமை என்கிற இருள் உயிரைச் சூழ்ந்து படர்ந்து கிடக்கின்றது. உயிரின் சிற்றறிவு ஆட்டிச் செல்வார் வழி



நின்று ஆடுகிறது. ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் புறப்பொருள்களோடு ஒன்றிக் கொள்ளும்பொழுது அந்த அனுபவத்தால் உயிருக்குக் கிடைக்கும் சிற்றறிவு பரம்பொருள் ஒன்று இருப்பதை மறைத்துவிடுகின்றது. இந்த நிலையில் உலக இயலே உண்மை என்ற நினைப்பில் வாழ்நாளை செலவழிப்பது நமக்கு இயல்பாகிவிட்டது. அறியாமையால், ஏதோவொரு மயக்கத்தில் நாம் நமது வாழ்நாளை கடத்தி விடுகின்றோம். குயில் ஒன்று தனது முட்டையை காக்கை கூட்டினில் விடுகின்றது. காக்கை தனது அறியாமையால் குயிலின் முட்டையையும் பேணிக் குஞ்சு பொரித்து குயிற் குஞ்சைக் காத்து வருகிறது. என்னே இந்த மாயையின் விந்தை? காக்கைக்கு தன் குஞ்சு என்றும், குயிற் குஞ்சென்றும் பாகுபடுத்துகின்ற அறிவு இல்லை. ஏதோ ஒரு மயக்கத்தில் காக்கை குயிற் குஞ்சை தன் கூட்டிலேயே வளர்த்து வருகின்றது.

''குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்
கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லை போக்கில்லை ஏனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே''
(திருமந்திரம்......488)

ஆணவம், கன்மம், மாயை என்கிற மூன்று மலங்கள் உயிரைப் பந்தித்து, உயிரின்போக்கை நிர்ணயிக்கின்றன. அதன் காரணமாக மனிதனை ஆசாபாசங்கள் ஆட்டி வைக்கின்றன. ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் பிரதானமாகக் காணப்படுகின்றன. உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் உயிருக்குத்தான் என்கிற எழுச்சியைக் கொடுத்து தன்னுள் இயங்கும் உண்மைச் சக்தியை மறைத்து விடுகின்றன. மேலும், வளர்ந்து வரும் ஆசைகள் மனமாகிய கண்ணாடியில் அழுக்குபோல் படிந்து உண்மையைத்தூய்மையைமறைக்கின்றன. ஆசைகள் வலிமை பொருந்தியவை. அவற்றை வெல்லும் ஆற்றலை தானே பெறவில்லை என்கின்றார் திருமூலர். **''வெல்ல கில்லேன் புலன் ஐந்துடன் தன்னையும்''** ஆசைகள் காமத் தீயை வளர்க்கின்றன. காமம் என்பது பொருள்கள் மீது நாம் வைக்கும் பற்றாகும். காமம் நிறைவேறாதபொழுது சினம் பிறக்கின்றது. மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. சினம் அறிவினை அழிக்கின்றது. மயக்கத்தைக் கொடுத்து உண்மையை மறைக்கின்றது. அதனால் உயிர்கள் உண்மை நிலையை அறியாது மருளில் ஆழ்ந்து துன்பப்பட்டு நிற்கின்றன. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்கள் உயிரை மருளில் ஆழ்த்தி மீண்டும் மீண்டும் பிறப்புக்குக் காரணமாகின்றன. ஆசைகள் வளர வளர உயிர்கள் பல பிறப்புகளை எடுத்து அந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நியதிக்கு ஆட்படுகின்றன. மனதிலிருந்து வெளிப்படும் ஆசைகள் நமது உடலின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன. மனதில் ஆசைகள், வாக்கில் இன்னாத சொல்,

பொய், புறங்கூறல், உடலில் அழுக்கு ஆகியவை உயிருக்கு வினைக்கடலைச் சேர்த்து, இறப்பையும், பிறப்பையும் மாறி மாறித் தருகின்றன. ஆகவே, பிறவிக் கடலைத் தாண்ட வேண்டுமானால் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களிலிருந்தும் தன்னை விடுபடுத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் துன்பம்தான்.

''மூன்றுள குற்ற முழுது நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே''.

(திருமந்திரம்....2435)

ஆசைகளுக்கு அத்தனை வலிமை உண்டு. தேவர்கள்கூட ஆசைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆசைகளுக்கு மூல காரணமே அநாதியே உயிர்களைக் கட்டுப்படுத்தி வரும் பாசம்தான். பாசத்தின் கூறுகளான ஆணவம், கன்மம், மாயை ஆகியவை உயிருக்கு ஒரு எழுச்சியைக் கொடுத்து, இந்திரியங்கள் சார்ந்த இயக்கத்தை வலுப்படுத்தி உயிர்களுக்கு வினை கூட்டத்தைச் சேர்க்கின்றன. இந்திரியங்களின் சேஷ்டைகளை அடக்கிவிட்டால் ஆசைகளை அடக்கிவிடலாம் என்று நினைக்கலாம். ஆனால் இந்திரியங்களை அடக்கி வைப்பது அவ்வளவு எளிதல்ல. இந்திரியங்களை முழுமையாக அடக்கி ஆளும் தேவர்களை காண்பதும் கடினம் என்று திருமூலர் கூறுவார். இந்திரிய ஓட்டத்தை முழுமையாகவும் நிறுத்திவிட்டால் அவை ஜடப்பொருளாகும். அவற்றிற்கென்று உள்ள பணிகளில் ஈடுபடுத்த முடியாது. எனவேதான் திருமூலர் பெருமான் **'அஞ்சு அடக்கா அறிவு'** என்பதை கோடிட்டுக் காட்டுகின்றார்.

''அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சு மடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சு மடக்கில் அசேதன மாமென்றிட்
டஞ்சு மடக்கா அறிவறிந் தேனே''

(திருமந்திரம்.....2033)

உயிரானது உடலுடன் சம்பந்தப்பட்ட நிலையில் இந்திரியங்களால் தூண்டப்பட்டு உடலில் வேட்கைகள் தோன்றுகின்றன. அவை மனதிலே பரவுகின்றன. அவற்றை நாம் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றோம். சில ஆசைகளை நிறைவேற்றிக் கொள்கின்றோம். அப்பொழுது நமக்கு இன்பம் கிடைக்கின்றது, பல ஆசைகளை நம்மால் நிறைவேற்ற முடிவதில்லை, துன்பப்படுகின்றோம். துன்பங்களாகிய பேரலைகளும் நடுநடுவே சிற்றலைகளைப் போல தோன்றி மறையும் இன்பங்களும் உயிர்களை அங்குமிங்கும் தள்ளிச் செல்கின்றன. ஆழ்கடலில் துணை ஒன்றுமின்றி, பற்றுவதற்கு ஒன்றுமின்றித் தனியாக நின்று நாம் நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. அப்பொழுதாவது ஆசைகள் நம்மை விடுமா என்றால் அதுவுமில்லை.


மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள் கூட இந்த உட்போராட்டத்தை அனுபவித்திருக்கின்றார்கள். அவர்களுடைய உள்ளங்களிலே பல சஞ்சலங்கள் தோன்றி இருக்கின்றன. மாணிக்கவாசகர் பெருமான் புலன்கள் தம்மை துன்புறுத்திய அனுபவத்தை பல பாடல்களில் பாடுகின்றார். புலன்களுடைய தாக்குதல் காரணமாக உடலும், உள்ளமும் அடைந்த கீழ்மை நிலையைப் பற்றி எடுத்துக்கூறி வருந்துகின்றார். புலன்களைப் பின்பற்றும் மனதின் போக்கைப் பற்றி துயரப்படுகின்றார். அதனால் தமக்கு இறை அனுபவம் கிடைக்காமல் போய்விடுமோ என்றும் அச்சப்படுகின்றார். புலன்கள் தன்னுடைய அறியாமையை வலுப்படுத்தின என்பதை **'வஞ்சனை செய்தன'** என்கிற சொற்களால் தெளிவுபடுத்துகின்றார்.

''மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேன்'.

திருவாசகப் பாடல்கள் பல காமத்தின் வலிமையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. மாதர் மீதுள்ள மயக்கம் ஒரு சூறாவளி காற்றைப்போல் தாக்குகின்றது. மனம் தடுமாற்றம் அடைகின்றது. கொந்தளிக்கும் கடலிலே தத்தளிக்கின்றது. காமமாகிய சுறா மீன்கள் நம்மை நோக்கி வந்தடைகின்றன. நம்மை கவ்விச் செல்லப் பார்க்கின்றன. இவற்றால் நமக்குக் கிடைப்பதெல்லாம் துன்பமேயன்றி வேறில்லை. காமத்தின் வலிமை முன் உயிரானது செயலிழந்து அழிய நிற்கிறது. இந்த அழிவிலிருந்து தப்பி வர வேண்டுமே! தன்னைக் காப்பாற்ற ஒருவரும் வர மாட்டாரா என்றெல்லாம் மாணிக்கவாசகப் பெருந்தகை வருந்தி நிற்கின்றார். ஐந்தெழுத்தை பற்றிக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை என்று உணருகிறார்.

''தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து
எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றி
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனிஎன்னே உய்யுமாறு என்றென்று எண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின் றேனே..

(திருவாசகம்)



ஆசைகளின் வலிமையைக் குறைக்க முடியுமா? முடியும் என்கிறார்கள் அருளாளர்கள். கருணை மிக்க இறைவன் அதற்காக நமக்கு வழியைக் காட்டுகின்றான். நமது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை அவை போகும் போக்கில் உபயோகித்தால் வினைகள் மூளும். அதே மனமும், வாக்கும், காயமும் உலகத்தைப் பற்றாது இறைவனைப் பற்றி நின்றால் வினைகள் நம்மை வந்தடையாது. மெய்யுணர்வாளர்கள் தங்களது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை இறைவனிடம் செலுத்தி தங்களை வினைகள் பற்றாது பார்த்துக்கொள்வர்.

'மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே''.

(திருமந்திரம்...2612)

உலகத்தின் மீது பற்றை வளர்த்தால் உலகத்தைப் பற்றிய சிந்தனையும் அவாவுமே அதிகமாகும். அதற்கு மாறாக பரம்பொருளை சிவபிரானை மனதில் வைத்தால் உலகப் பொருள்கள் மீது உள்ள நாட்டம் குறைந்து விடும். இதை நாம் தீவிரமாக சிந்தித்துப் பார்த்தால் நமது சித்தம் தெளிவாகும். நம்மையெல்லாம் ஆளும் சிவபெருமான் தெளிவான சிந்தையில் புகுந்து சித்தத்தைத் தனதாக்கிக் கொள்வான்.

'பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்
பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே

(திருமந்திரம்...2036)

**இறைவன் ஒருவனே நமக்கு உள்ள ஒரு பற்றுக்கோடு என்கிற சிந்தனையை வளர்க்க வேண்டும்.** மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை இறைவனோடு பொருத்தி இயக்குகின்ற வகை நம்முடைய தியானத்தைச் செலுத்தவேண்டும். பிற பொருட்கள்மீது உள்ள பற்றினை மெதுவாக ஒடுக்க வேண்டும். நம்முள்ளேயே இருக்கும் இறைவன் மீது நம்முடைய நாட்டத்தைச் செலுத்த வேண்டும். அப்பொழுது சிந்தை தெளிந்து இறைவனை நாம் மனக்கோவிலிலேயே நிறுத்தலாம்.

'நடக்கின்ற நந்தியை நாடோறு முன்னில்
படர்க்கின்ற சிந்தையைப் பையவொடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்
வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே'.

(திருமந்திரம்..2039)

சிவபெருமான் உலகப் பற்றுகளைவிட்ட ஞானிகள்யாவரும் பற்றி நின்ற பரம்பொருள் ஆவான். ஞானிகளுக்கு அவன்மீதுதான்எல்லா நாட்டமும் செல்லும். மெய்ஞானத்தைப் பெற்றவர்கள்சிவபெருமானைவிரும்பி நிற்பர் எல்லாக் கல்விகளின் முடிவுகளை உணர்ந்தவர்கள் சிவசோதியை தன்னுள் பெற்று நிற்பர் அந்த நிலையில் பேச்சற்று நிற்பர். ஆகவே, நாம் விரும்ப வேண்டியது இறைவனுடைய திருவடிகள். அறுக்க வேண்டியது நமக்குமயக்கத்தைத் தரும் ஐம்புல பாசங்கள். தொடர வேண்டியது மனக்கலக்கத்தைப் போக்கக் கூடிய சிவபரம்பொருள். அவ்வாறு செய்தால் நமது சிந்தை சிவத்துடன் கலந்துவிடும்.

'மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்
துயக்கறுத் தானைத்தொடர்மின்
தொடர்ந்தால்
தியக்கஞ்செய் யாதே சிவனெம் பெருமான்
உயப்போ எனமனம் ஒன்றுவித் தானே'

(திருமந்திரம்..... 2608)

'பற்றற் றவர்பற்றிநின்ற பரம்பொருள்
கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்
கற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே''.

(திருமந்திரம்..2865)

புலன்களை வென்ற அடியார்களில் தலை சிறந்து நின்றார். திருநீலகண்ட நாயனார். குயவர் குலத்திலே பிறந்து, தமது குலத் தொழிலை விடாது செய்து வந்தாலும்அறவழியிலே வாழ்ந்து சிவனடியார்களுக்காக பணிவிடை செய்து, எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டு, தூய அன்பிலே அவர்நின்றார். பருவம் காரணமாக அவர் சிற்றின்பத் துறையிலே ஒரே ஒரு முறை தவறிவிட்டதன் காரணத்தினால் அடியார்தம் மனைவியார் ஆண்டவன் மீது இட்ட ஆணையை ஏற்றுக்கொண்டு, வயதில் சிறியவராக இருந்தாலும், ஒழுக்கத்தில் பெரியவர் என்கின்ற நிலையில் மாதர் ஒருவரையும் மனத்தினும் தீண்டேன் என்று விரதம் பூண்டார். அந்த விரதப்படியே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். வெளி உலக மக்கள் அறிந்து கொள்ளாவண்ணம் ஒரே வீட்டிலேயே உடன் வாழ்ந்து நாயனாரும் அவரது மனைவியாரும் இல்லறம் நடத்திக் கொண்டு வந்தனர். இந்த நிலையை சேக்கிழார் பெருமான் உள்ளன்போடு விளக்குகின்றார்.

''கற்புறு மனைவி யாரும்
கணவனார்க் கான எல்லாம்
பொற்புற மெய்யு றாமல்
பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியாத் தங்கண்
இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை
அயலறி யாமை வாழ்ந்தார்.''

திருத்தொண்டர் புராணம்.

இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. இருவருக்கும் மூப்பு வந்தடைந்தது. அவர்களுடைய உடல் தளர்ந்தது. ஆயினும் அவர்களுடைய இறை அன்பு வளர்ந்தது. அவர்களுடைய பெருமையை இறைவன் உலகுக்கு உணர்த்த விரும்பினான். திருநீலகண்டரோ தமக்கும் தமது மனைவியாருக்கும் உள்ள உறவினை உலகுக்கு அறிவிக்க விரும்பவில்லை..எல்லாம் இறைவன் செயல். சிவபெருமான் சிவயோகியாக உலகிற்கு வந்து திருவிளையாடல் புரிகின்றார். என்ன நாடகம்? திருநீலகண்டரின் பெருமை வெளி வருகின்றது. நாயனாருக்கும் அவருடைய மனைவியாருக்கும் காட்சி தந்தருளி 'ஐம்புலனும் வென்று மிக்கீர்களே? இளமையோடு என்றும் என்னுடன் இருப்பீர்களாக?' என்று அருள் புரிகின்றார். நாயனாரும் அவர்தம் மனைவியாரும் ஐம்புலன்களை அடிமைப்படுத்தி, அவற்றை தம்வழி நிறுத்தி வாழ்க்கை நடத்திய காரணத்தால் அத்தகைய பெருமையைப் பெற்றனர்.

'மன்றுளே திருக்கூத் தாடி யடியவர் மனைகள்
டோறுஞ்
சென்றவர் நிலைமை காட்டுந் தேவர்க டேவர்
தாமும்
'வென்றவைம் புலனால் மிக்கீர்? விருப்புட
னிருக்க நம்பா
லென்றுமிவ் விளமை நீங்கா' தென்றெழுந்
தருளினாரே''

—(திருத்தொண்டர் புராணம்..401)

ஐம்புலன்களுடைய அதிகாரம் தம்மிடம் செல்லாது என்று உறுதிப்பாட்டோடும், நம்பிக்கையோடும் கூறுபவர் திருநாவுக்கரசர் ஆவார். புலன்களை அவர் தன் வழி கொண்டு வந்ததன் காரணத்தால் தைரியத்துடன் பேசுகின்றார். 'இறைவன் வானவர்களைத் தாங்கும் தூணாக இருக்கலாம். பாதாளத்தின் மூலமான பொருளாக இருக்கலாம். நான் நேரில் பார்த்ததில்லை. இப்பிரபஞ்சம் முழுமையும் அவனுடைய ஆட்சியில் இருப்பதை அறிந்து கொண்டேன். அவனுடைய அருளாணையைத் தெரிந்து கொண்ட பிறகு வேறொன்றையும் பற்ற மாட்டேன். அவனை அடைந்துகொண்ட நிலையில் உங்களுடைய அதிகாரத்திற்கு அடிமையாக மாட்டேன். என்னை நீங்கள் அலைக்க முடியாது. இனி நீங்கள் என் பக்கம் வராதீர்கள்.'' என்று உயிர்களிடம் சென்று, பொருந்தி தங்கள் வஞ்சகத் தொழிலை நடத்த முயலும் ஐந்து இந்திரியங்களை நோக்கிக் கூறுகின்றார் அப்பர் பெருமான்.

''மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாள்? முழுதும்இவ் வுலகை ஓடி
நாள்வாயும் நும்முடைய மம்மர் ஆணை
நடாத்துகின்றீர்க்கு அமையாதே; யானேல்
வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை ஆரூர்
ஆள்வானைக் கடுகச்சென்று அடைவேன்;
நும்மால்
ஆட்டுணேன்; ஒட்டந்திங்கு அலையேன்
மின்னே''.

**(தொடர்ந்து வரும்).**

# வினையிருள் அகல

## வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ்

சென்ற இதழ் தொடர்ச்சி....

ஒருவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால் இன்னொருவன் கட்டுப்படுத்துவான். ஒரு சமுதாயம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால் மற்றொரு சமூகம் கட்டுப்படுத்தும். கட்டுப்பாடு மீறுங்கால், கசப்பான முறையில் கட்டுப்பட வேண்டி வரும். இது இயற்கையின் நியதி. இதுவே, யாவற்றையும் கட்டுப்படுத்திக் கொண்டுதான் யார் கட்டுக்கும் அடங்காமல் இருக்கும் கர்மாவின் ஆட்சியாகும். கர்ம பந்தமே ஒருவனை சம்சார பந்தத்தில் உழலும்படிச் செய்கிறது. மீண்டும் மீண்டும் உயிரினை உடம்புகளில் கட்டிப் போடுகிறது. செய்த தப்பினைப் பொறுத்தே தண்டனை கொடுக்கப்படுகிறது. ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டி கண்டதை எண்ணி, கண்டதைச் செய்து, கண்டதைத் தின்று கண்டபடி பேசி, விபரீதமான புதிய கர்மாக்களை உண்டு பண்ணிக் கொண்டு போனால், என்றும் வாழ்வில் விடிவு காலம் வராது.

'கர்மா' அல்லது 'வினை' என்பது மூன்று வகைப்படும். இவைகளை சஞ்சிதக் கர்மா, பிராப்தக் கர்மா, ஆகாமியக் கர்மா என்று ஆன்றோர் பிரித்துள்ளார்கள். இம் மூன்று கர்மாக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது; ஒன்று மற்றொன்றுக்குக் காரணமாகவும் அடித்தளமாகவும் அமைகிறது.

பல பிறவிகளில் செய்த வினைகளின் தொகுப்பாகக் கட்டித் தேக்கி வைக்கப்பட்டுள்ளது Bank Balance என்று சொல்லலாம். நல்வழியில் சேர்த்த பணமும், கெட்ட வழியில் சேர்த்த பணமும் Bank Balance வங்கியிருப்பு எனலாம். கர்மவினை என்பது ஒரு செயலைச் செய்யும் போதே விளைவது. ஒருவனுக்குத் தெரிந்தாலும், தெரியா விட்டாலும், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் யார் தடுத்தாலும் நிற்காமல் அவன் கணக்கில் கண்டிப்பாக ஏற்றப்படுவது. பாவ புண்ணியங்களில் கூட்டு சஞ்சிதம். நரகம் என்பது ஒன்று உண்டு. இதில் சந்தேகம் தேவையில்லை. சஞ்சிதக் கர்மாவில் ஒரு பகுதி நரகத்தில் யாதனா சரீரம் என்ற ஒரு சரீரதத்தின் மூலம் கொடுமையான தண்டனைகளை அனுபவித்தது போக மீதி உள்ளதை பூலோகத்தில் பல பிறவிகளில் அனுபவிக்க வேண்டியுள்ளது. மனிதன் படைக்கப்படும்போது முன்பு நடந்தவைகளையும், பின்பு நடக்கப்போவனவையும் மனிதனின் மூளைக்கு எட்டாமல் அவன் சிந்தனைக்குச் சிக்காமல் அடுத்தவன் மனதில் உள்ளதை அறிய முடியாமல் படைக்கப்படுகிறான். ஆனால், யூகிக்கும் தன்மையும் சிந்தனைசக்தியும்அமைத்துப் படைக்கப்படுகிறான். ஆகவே, எந்தப் பிறவியில் என்னென்ன கர்மாக்களை அனுபவித்துத் தீர்த்தோம் என்பதையும் என்னென்ன புதிய கர்மாக்களை சேர்த்துக் கொண்டோம் என்பதையும் நாம் உணர முடிவதில்லை.

சிலருக்கு 'நாடி'கள் மூலமாகப் பிறவிகள் பற்றியும், கர்மாக்கள் பற்றியும்சொல்லப்பட்டிருக்கும். முழுமையான அளவு பிறவி உண்மை பற்றியும், கர்மா, கர்மா பலன்கள் பற்றியும், நாடிகளிலோ, ஜாதகம் மூலமாகவோ உணர முடியவே முடியாது. அதி ரகசியமாகவே இவைகள் பாதுகாக்கப்படுகிறது. பலன்கள் அனுபவிக்கும்படி செய்யப்பட்டுள்ளது. ஆனால் சகலமும் தெரிந்த குரு ஒருவரால் பிறவிகளை, கர்மாக்களை அறிய முடிந்தாலும், கர்மப் பலன்களை அனுபவிக்கும்படியாகவே அவரும் செய்வார். ஆகவே சீடனானவன், தனக்கு வரும் ஆபத்தை குரு தெரிந்து கொண்டிருந்தும், தனக்கு உபகாரம் செய்யவில்லையே என்று குருவை நிந்திப்பது குருதோஷமாக முடியும். எந்த ஒரு கால கட்டத்திலும் 'குரு' வை நிந்திக்கவே கூடாது. அதேபோல் தெய்வத்தையும் நிந்திக்கக் கூடாது. ஆக கர்மா என்ற அபூர்வ சக்தி எக்காலத்திலும் தானாக அழியவோ விலகவோ வாய்ப்பே இல்லை என்பதைக் கட்டாயமாகவும் புரிந்து கொள்ள வேண்டும். கர்மசக்தி என்பது 'ஸ்தூல உடல்' கொண்டுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானதாகும். ஆனால் மனிதனுக்கு மட்டுமே சில கர்மாக்களை அதிகரிக்கவும், சில



வற்றைக்கழிக்கவும் புதிய கர்மாக்களை உருவாக்காமல் இருக்கவும் செய்யுமாறுகுருவருளும் திருவருளும் உதவி செய்ய முடியும். மனிதனை தவிர ஏனைய கீழ்நிலையில் உள்ள உயிர்கள் பழைய கர்மாக்களை அனுபவிக்கும். புதிய கர்மாக்களை அவ்வுயிரினங்கள் உண்டாக்குவதில்லை. மனிதனுடைய செயலினால், மற்ற உயிர்களுக்கு எளிதில் விமோசனம் கிடைக்கும் படியும் அமையும். உதாரணமாக ஒருவன் பட்டு வேஷ்டியை உடுத்திக் கொண்டு ஒரு 'மகானை' தரிசிக்கச் சென்றால், அம்மகான் வழங்கும் ஆசியினால் முதலில் பயனடைவது பட்டு வேட்டிக்குக் காரணமான பட்டுப் புழுக்களும் ஆகும். அப்பட்டுப் புழுக்கள் அனைத்தும் அடுத்த பிறவியில் மனிதனாக பிறக்கும் என்றும் ஆன்றோர்கள் கூறுவார்கள். ஒரு செயல் செய்யப்படும்போது புதியதாக உண்டாகும் வினை 'ஆகாமியம்' எனப்படும். இவை பாதுகாக்கப்பட்டு வைக்கப்படுகிறது. அப்போது 'சஞ்சிதம்' எனப்படுகிறது வங்கியில் 'பணம்' இருப்பில் உள்ளதுபோல் எனலாம். ஒவ்வொரு பிறவியிலும் 'சஞ்சித' கர்மாவில் ஒரு பகுதி பகிர்ந்து வழங்கப்படுகிறது. இப்படி பகிர்ந்து வழங்கப்படும்' 'கர்மா' 'பிராப்தம்' எனப்படும். பிராப்த கர்மா ஒருவனுடைய ஆயுள்காலம் முழுவதும் பரவி விரிந்து தொடரும்படியாக அமைக்கப்படுகிறது. உயிரில் கலந்து 'மாயை' யாக உயிரையும், உயிர் கொண்ட உடலையும் பற்றிக் கொண்டு 'பிராப்தகர்மா' பலனைக் கொடுக்க வல்லது. காலதேவனின் கணக்குப்படி ஒவ்வொரு வினாடியும் நடக்க வேண்டிய சம்பவங்களை நிர்ணயம்செய்து உயிர் உடல் வழியாக பலனை அனுபவிக்கும்படியாக மிகமிக அழுத்தமாக அழிக்கவே முடியாதபடி அமைக்கப்படுகிறது.

இவ்வகையான பிராப்த கர்மா மனிதன் தான் முன்கூட்டியே அறிந்து பயன் பெரும் வகையில், மகான்கள் ஜோதிடம்மற்றும் நாடி சாஸ்திரங்களை வகுத்துக் கொடுத்திருக்கின்றனர். தெய்வ சக்திகள் அருள்வாக்கிலும் 'பிராப்த கர்மாவை' பேசும். தெய்வ அருள், குருவருள் இவைகளும் பிராப்தத்தின்படியே அமையும். ஆனால் ஜோதிடம், நாடி, மற்றும் அருள்வாக்கில்கூட காண முடியாதபடி சில ரகசியங்கள் வாழ்க்கையில் புதைந்து கிடக்கும். இவற்றை அறிவது மிகக் கடினம். அப்படி தெரிக்கப்பட்டாலும் புரிந்துகொள்வதுகடினம். புரிந்து கொண்டாலும் செயல்படுத்துவது கடினம். இதுவே மாயை எனப்படும். நாம் மாயைக்குள் சிக்கியுள்ளோம் என்று தெரிந்து கொள்வதற்குள் பல் சென்மங்கள் முடிந்து விடும்.

(தொடர்ந்து வரும்)

# அருள்மிகு சங்கரநாராயணர்

## திருக்கோயில் தலவரலாறு

### (திருக்கோயில்-வெளியீடு)

சீரோங்குந் தென்பாண்டிச் செஞ்சாலிச் சங்கரனார்
பேரோங்குஞ் கோவிற் பெருமிதத்தை—நாரோங்குஞ்
சிந்தை நினைக்கச் செவிகேட்கக் கைகுவித்து
வந்தித்து நின்றேன்மகிழ்ந்து

1. **அமைவு இடம்** :— திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் இத்தலம் கோயிலின் பெயரையே கொண்டு அமைந்த சங்கரநயினார் கோவில் என்ற நகரின் மத்திய பாகத்தில் அமைந்துள்ளது. இந்நகர் தென்னிந்திய இரயில்வேயில் விருதுநகர் - தென்காசி குறுக்குப் பாதையில் அமைந்துள்ளது. இரயிலடியிலிருந்து கோயிலுக்கு சுமார் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. இது தவிர இந்நகர் நாற்றிசைகளிலும் நல்ல சாலைகளால் திருநெல்வேலி, கோவில்பட்டி, தென்காசி,ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய நகரங்களுடன் இணைக்கப்பட்டுப் பஸ் வசதியும் நல்லமுறையில் அமைந்துள்ளது. நாற்புறங்களிலுமுள்ள மிகப் பெரிய மதில் சுவர்களுடன் கூடிய இக்கோயில் கிழமேல் 592 அடி நீளமும், தென்வடல் 306 அடி அகலமும் கொண்ட பரப்பில் இருக்கிறது. இத்திருக் கோயிலின் விஸ்தீரணம் 4 ஏக்கர் 50 சென்ட் பரப்பில் உள்ளதாகும்.

2. **பெயர் விளக்கம்** :— இத்திருக் கோயில் கோயிலின் பெயரையே கொண்டு அமைந்த சங்கரநயினார்கோவில் என்ற நகரமாகும். சங்கன் பதுமன் என்ற பாம்பரசர்கள் இருவர்களும் சைவ வைணவ பேதம் தோன்ற முறையே சிவன்தான் பெரியது, நாராயணன் தான் பெரியது என வாதிட்டு முடிவு காணாமல் அல்லல் பட்டபோது அன்னை உமாதேவிஇறைவனை நோக்கி அரனும் அரியும் ஒன்றே என்று உணர்த்த வேண்டி தவமிருக்க இறைவன் சங்கரநாராயணராக காட்சி கொடுத்தார். இக் கோயிலுக்குபூகைலாயம், புன்னைவனம், சீராசபுரம், சீராசை, வரராசைபுரம், கூழைநகர் என்ற வேறு பெயர்களும் உள்ளன.

3. **தல வரலாறு**:— உமாதேவியாரும் சிவபெருமானிடம் "உம்முடைய திருவுருவத்தில் நாராயண மூர்த்தி பொருந்தியிருக்கும் திருக்கோலத்தை காட்ட வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தனர். சிவபெருமானும் உமாதேவியாரை நோக்கி 'பொதிகைமலை பக்கத்தில் சென்று தவம் செய்வாயானால், நீ விரும்பிய திருவுருக் காட்டுவோம்' என்று அருளினார். அதன்படி 'தேவர்கள் அனைவரும் புன்னை விருட்சமாகவும் தெய்வ கன்னியர்கள் அனைவரும் பசு வடிவிலும், முனிவர்கள் ஆதிசைவராகி (பட்டமார்) வந்து நம்மை பூசை செய்யுங்கள்' என்று அம்பிகை கூறி புன்னைவனத்தலத்தை அடைந்து நெடுங்காலம் தவம் செய்தருளினார். சிவபெருமான் எழுந்தருளி ஆடிமாதம் பௌர்ணமி திதியன்று உத்திராடம் நட்சத்திரத்தில் சங்கரநாராயணராக திருவுருக்காட்சி கொடுத்தருளினார். பின்னர் சிவலிங்க வடிவமாகி உமா தேவியாருடன் புன்னைவனத்தில் எழுந்தருளினார். இச்செய்தியை தென்மொழி வடமொழி புராணங்களில் சங்கர நாராயணர் சருக்கத்தில் விரிவாக காணலாம்.

"தாதுலாங் குழலாம்பையர் ஆவுருத் தாங்கிப்
போதுதோறுமின் பால்பொழிந்துள மகிழ்புரிவீர்
ஆதலா லெமக்கு ஆவுடையா ளெனச் சிறந்த
கோமதிநாம மெல்வுலகுங் கூறிட வேண்டும்".

பார்வதி தேவியின் சாபத்தால் மணிக்கிரிவன் என்ற தேவன் பறையனாகிப் புன்னை வனக் காவலனாகி காவல்பறையன் என்னும் பெயர் பெற்றான். புன்னை வனத்தில் ஒரு பக்கம் புற்றொன்று வளர்ந்தது. அதை ஒரு நாள் அவன் வெட்ட அதிலிருந்த பாம்பின் வால் வெட்டப்பட்டது. அப்போது அவன் புற்றில் சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். பொருநை ஆற்றின் கரையில் மணலூரை அரசாண்ட உக்கிரபாண்டியன் அடிக்கடி மதுரை சென்று மீனாட்சியம்மையையும் சொக்கநாதரையும் வழிபடும் வழக்கமுடையவர். காவல் பறையன் சிவலிங்கத்தை புற்றில்கண்ட அன்று மதுரை செல்லும் பாண்டியருடைய யானை பெருங்கோட்டூர் என்னும் இடத்தில் கொம்பினால் தரையை குத்திக் கீழே விழுந்து புரண்டது. அச்சமயம் காவல்பறையன் ஓடி வந்து புற்றைப் பற்றிய செய்தியைத் தெரிவித்து உடன் பாண்டியரை அழைத்து வந்



தான். புற்றினையும் கூழைவாலினதாகிய பாம்பினையும் கண்ட பாண்டியர் சங்கரனாரின் அசரீரியாக இறைவன் ஆணையைக் கேட்டுக் காடு கெடுத்து நாடாக்கி கோவில் கட்டி சங்கரன்கோவில் ஊரையும் தோற்றுவித்தார்.

தேவேந்திரன் மகனாகிய சயந்தன் காக்கை உருவாகிச் சீதையின் தனத்திலே கொத்தினான். அதனை யறிந்து இராமபிரான் ஓர் அம்பை அவன் மேல் ஏவினார். சயந்தன் காக்கை உருவம் நீங்காமல் வாடி, இந்திரனால் ஏவப்பெற்று அவன் தந்த முத்துமாலையைச் சங்கரலிங்கத்துக்குச் சாத்தி வழிபட்டுத் திருவருளால் முன்னைய உருவம் அடைந்தான்.

சேத்தூருக்கு பக்கத்திலே ஓடும் தேனியாற்றங்கரையிலே தவம் செய்திருந்த சிவராத முனிவர் மகனான 'கன்மாடன் 'பசுக்கொலை செய்து சங்கரன் கோவிலுக்கு வந்து நாகசுனையில் மூழ்கி மூன்று நாளில் சங்கரனார் திருவருளைப் பெற்று நற்கதி அடைந்தான்.

பக்திசார முனிவன், இந்திரன், அகத்தியர் வைரவர், சூரியன், அக்கினி, ஆகியவர்களும் இத்தலத்தில் உள்ள சங்கரரையும் கோமதி அம்பிகையையும் வழிபட்டுத் திருவருள் பெற்றிருக்கின்றார்கள்.

**4. தலவிருட்சம் : —** இத்திருக்கோயில் தலவிருட்சம் புன்னை மரமாகும். இந்நகர் புன்னை வனக்காடாக இருந்தது. அம்பிகை சிவபெருமானாரை நோக்கித் தவம் செய்யும் போது தேவர்கள் புன்னைமரமாகத் தோன்றினார்கள். தற்போது பழைய புன்னை விருட்சம் அழிந்துவிட்டது. புதிதாக 5 அடி உயரத்தில் புன்னை விருட்சம் வளர்ந்து வருகிறது.

### 5. மூர்த்தங்கள்

இத்திருக்கோயிலின் முகப்பில் சுமார் 100 அடி நீளத்தில் 25 அடி அகலத்தில் வெளி மண்டபம் அமைந்துள்ளது. வெளி மண்டபத்தில் தென்புறம் செளபாக்கிய விநாயகர் சன்னதியும் வடபுறத்தில் பழனியாண்டவர்சன்னதியும் உள்ளது. கோபுர வாசலுக்கு கிழக்கே மிகப் பெரிய கல் மண்டபத்தில் வடபுறம் நூல் நிலையமும், சித்த வைத்திய சாலையும் பூக்கடைகள் ஒன்பதும் அமைந்துள்ளன. மண்டபத்தின் தென்புறத்தில் பத்து கடைகளும் உள்ளன. மேலும் தென்புறத்தில் விநாயகர் சன்னதி ஒன்றும் சன்னதிக்கு முன்புறம் காணிக்கை வெள்ளிச் சாமான்கள் அர்ச்சனை, தேங்காய், கட்டணச் சீட்டுகள் விற்பனை செய்யுமிடமும் அமைந்து உள்ளது. அதன்

## துன்பத்திற்கு காரணம்

கடவுளிடம் பக்தி இல்லாத காரணத்தால்தான் மனிதன் பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகிறான்.

—இராமகிருட்டிணர்



பின்புறம் நவீன கலையரங்கம் கல்யாண மண்டபம் அமைந்துள்ளது. வடபுறத்தில் மயூராருடர் சன்னதியும் அதன் இடப்புறம் நாகசுனை என்ற தீர்த்தகட்டமும் உள்ளது.

இத்திருக்கோயிலில் மிகப் பெரிய இராஜ கோபுரம் கிழக்கு நோக்கி அமைந்து உள்ளது. இக்கோபுரத்தின் உயரம் 125 அடியும் ஒன்பது நிலைகளையும் கொண்டதாக விளங்குகிறது. அருள்மிகு சங்கரலிங்க சுவாமி சன்னதிக்கு முன்புறத்தில் பலிபீடமும், நந்திதேவரும், தங்கக் கொடிமரமும் அமைந்துள்ளது. மேற்படி சன்னதிக்கு முன்பு தென்புறத்தில் சித்தி விநாயகர் சன்னதியும் வடபுறத்தில் வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமான் சன்னதியும் உள்ளன. நுழைவு வாயிலில் தென்புறம் அதிகார நந்திதேவரும் குண்டலி சக்தியும் எழுந்தருளி உள்ளனர். உமாபதி சிவாச்சாரியார், உக்கிர பாண்டிய மகாராஜா ஆகியோரின் சிலை வடிவங்கள் இரு தூண்களில் அமைந்துள்ளன. சுவாமி சன்னதியின் முன்புறம் விநாயகர் கொடிமரம் உள்ளது. மகா மண்டப நுழைவு வாயிலின் முன்புறம் இரு பக்கங்களிலும் துவாரபாலகர் கல் சிலைகள் உள்ளன. மகா மண்டபத்தின் வடபுறம் அருள்மிகு நடராஜப் பெருமான் சிவகாமி சுந்தரி அம்மையாருடன் (உற்சவர்) எழுந்தருளியுள்ளார். மேலும் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, மகா விஷ்ணு கங்காளநாதர் இந்திரன், நால்வர், அம்மச்சியார், அய்யனார் ஆகிய உற்சவ மூர்த்திகள் உள்ளனர். தென்புறம் சந்திரசேகரர் கோமளா அம்பிகை உற்சவ மூர்த்திகள் உள்ளனர். அர்த்த மண்டப நுழைவு வாயிலின் இடபுறம் விநாயகர், வலது புறம் சுப்பிரமணியர் கல்சிலைகள் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தில் ஸ்ரீ பெலிநாதர் வெள்ளி சிலை உள்ளது. கருவறையில் அருள்மிகு சங்கரலிங்கப் பெருமானும் (சிவலிங்கம்) இடதுபுறம் மனோன்மணியம்பாளும் எழுந்தருளி உள்ளனர். சுவாமி சன்னதியில் உட்பிரகாரத்தின் முகப்பில் சூரியனின் திருவுருவும், சூரியன் கிணறும் அடுத்து நால்வர் திருவுருவும் மகாவிஷ்ணு, அறுபத்து மூவர், மீனாட்சி சொக்கநாதர் திருவுருவம் சப்த மாதா திருவுருவமும் அமைந்துள்ளன. கருவறையின் தென்சுவரில் தட்சிணாமூர்த்தி உருவுருவமும், மேல்சுவரில் நரசிம்மமூர்த்தி திருவுருவமும், வடசுவரில் பிரம்மாவின் திருவுருவமும் அமைந்துள்ளன. சுவாமி சன்னதி தெற்கு பிரகாரத்தின் மூலையில் மூல விநாயகர் சன்னதியும் அதையடுத்து சங்கரலிங்கம் கோமதி அம்பிகை உற்சவமூர்த்திகளும் அமைந்துள்ள சன்னதியும், அதையடுத்து பஞ்சலிங்க திருவுருவங்களும், சரஸ்வதி, லெட்சுமி திருவுருவமும் அமைந்துள்ளன. வ்டக்குப்புறத்தில் மூலையில் வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர் சன்னதியும் பக்கத்தில் பாம்புப் புற்று சன்னதியும், சனீஸ்வரர் திருவுருவமும், அறுபத்து மூவர் உற்சவ திருமூர்த்திகளும் அமைந்துள்ளன. அதையடுத்து பைரவர், துர்க்கை சன்னதி தென்திசையை நோக்கி உள்ளது. சுவாமி சன்னதி நோக்கி சந்திரன் திருவுருவமும், சுவாமி சன்னதிக்கு வடபுறத்தில் சண்டிகேஸ்வரர் சன்னதியும் அமைந்துள்ளன. சுவாமி சன்னதிக்கு வடபுறத்தில் மதிற்சுவருக்கும் அம்பாள் சன்னதி தென்புற சுவருக்கும் இடையில் அருள்மிகு சங்கரநாராயணர் சன்னதி அமைந்துள்ளது. மேற்படி சன்னதிக்கு முகப்பில் தென்புறத்தில் விநாயகர் திருவுருவமும் வடபுறத்தில் சுப்பிரமணியர் திருவுருவமும் அமைந்துள்ளது. சன்னதிக்கு முன்பு சுமார் 80 அடி நீளத்தில் ஊஞ்சல் மண்டபம் அமைந்துள்ளது. சன்னதியின் முன்பு இருபக்கமும் துவாரபாலகர் திருவுருவமும் வலது பக்கம் விநாயகர் திருவுருவமும் அமைந்துள்ளது. இடது பக்கம் லட்சுமி நாராயணர் திருவுருவம் அமைந்துள்ளது. சன்னதியின் உட்பிரகாரத்தில் தென்புறத்தில் விநாயகரும், வடபுறத்தில் சுப்பிரமணியர் திருவுருவமும் அமைந்துள்ளது. சன்னதிக்கு தென்புறச் சுற்று சுவரில் சோடஷ விநாயகரின் திருவுருவ படமும்,மேல்பக்க சுவற்றில் அரங்கநாதர் பள்ளிகொண்ட திருவுருவப் படமும் வடபுறம் சோடஷ சுப்பிரமணியர் திருவுருவப் படமும், அம்பிகையின் தபசுக் காட்சி சூரியன் சங்கரலிங்க சுவாமியை வழிபடும் காட்சியும் ஓவியங்களாக வரையப் பெற்றுள்ளன.

அம்பாள் சன்னதியின் வெளிநுழைவு வாயிலின் முன்புறத்தில் பலிபீடமும், நந்திதேவர் திருவுருவமும், சொர்ண கொடிமரமும் அமைந்துள்ளது. நுழைவு வாயிலின் தென்

# இறைவன் கற்பக மரம்

ஒரு மனிதனுடைய எண்ணத்திற்கும் நோக்கத்திற்கும் தக்கபடியே அவனுக்கு வெகுமதி கிடைக்கிறது. இறைவன் பக்தர்கள் விரும்புபவைகளை எல்லாம் கொடுக்கும் கற்பக மரம் போன்றவன்.

—இராமகிருட்டிணர்



புறத்தில் செண்பக விநாயகரும் வடபுறத்தில் செண்பகவல்லி அம்மன் பீடமும் அமைந்துள்ளது. மகா மண்டபத்தில் இருபுறத்திலும் துவாரபாலகரும் பக்கத்தில் நந்திதேவர் திருவுருவமும் அமைந்துள்ளது. கருவறையில் அருள்தரும் கோமதி அம்பிகை திருவுருவம் அமைந்துள்ளது. உட்சுற்றுப் பிரகாரத்தில் தென்பகுதியில் விநாயகர் சன்னதியும் அடுத்து பள்ளியறையும் அதையடுத்து சரஸ்வதி, சுப்பிரமணியர், வள்ளிதெய்வானை திருவுருவமும் சன்னதிக்கு வடபுறத்தில் சண்டிகேஸ்வரி சன்னதியும், புற்றுமருந்து பிரசாதம் பக்தர்கள் எடுத்துச் செல்லும் வகையில் தொட்டி கட்டி போடப்பட்டுள்ளது.

அம்பாள் சன்னதிக்கு போகும் முகப்பிற்கு வடபுறத்தில் அருள்மிகு ஆறுமுக நயினார் சன்னதி அமைந்துள்ளது. ஐம்பொன்னாலான ஆறுமுக நயினார் வள்ளி தெய்வானை அம்பிகையுடன் கூடி எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். இத்திருவுருவம் மிகப் பெரியது. இது போன்று வேறு எங்கும் காண முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. சன்னதியின் சுற்றுப் பிரகாரத்தில் அறுபடை வீடுகள் படைப்பு ஓவியங்களாகதீட்டப்பெற்றுள்ளன.

நாகசுனை தீர்த்த கட்டங்களுக்கு மேற்பக்கத்தில் யானை மகால் உள்ளது. சுமார் 18 வயதுள்ள 10அடிஉயரம் கொண்ட யானை ஒன்று உள்ளது. யானை மகாலின் பக்கத்தில் பக்தர்களுக்கு விற்பனைசெய்யப்படுகின்ற பிரசாதங்கள் தயாரிக்கும் மடப்பள்ளி அமைந்துள்ளது. யானை மகாலுக்கு தென்புறத்தில் அருள்மிகு நடராஜர் சன்னதிஅமைந்துள்ளது.

சுவாமிசன்னதியின் வெளிப்பிரகாரத்தில் கீழ்பக்கம் மடப்பள்ளியும்அதையடுத்துவாகன அறையும் உள்ளது. மேலப் பிரகாரத்தில் தென்பகுதியில்கன்னிமூல விநாயகர் சன்னதியும் அதையடுத்து தலவிருட்சமும் உள்ளது. மேலப்பிரகாரத்தின் வடபகுதியில் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியர் சன்னதி உள்ளது.

சுவாமி சன்னதி முகப்பில்நவக்கிரகங்கள் சன்னதியுடன் உள்ளது.

**6. தீர்த்தங்கள் :** இத்திருக்கோயிலில் ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. அவை அக்கினி தீர்த்தம், அகத்திய தீர்த்தம், சூரிய தீர்த்தம், வைரவ தீர்த்தம், கௌரி தீர்த்தம் என்பனவாகும். சங்கரலிங்கத்திற்கு நிருதி திக்கில் சங்கர தீர்த்தம் உள்ளது. அது இந்திர தீர்த்தம் என்றும் பெயர் பெறும்.

சங்கன், பதுமன் என்னும் பாம்பரசர்களால் முழுகப் பெற்றதும், அவர்களால் நன்றாகத் தோண்டப் பெற்றதுமாகிய நாகசுனை தீர்த்தமும் இங்குள்ளது. காற்றைப் புசிக்கின்ற சர்ப்பங்களாலே செய்யப்பட்ட காரணத்தால் இத்தீர்த்தத்தில் நண்டு, ஆமை, தவளை, மீன் முதலிய நீர் வாழும் உயிர்கள் இல்லை.

**7.கோபுரங்கள் :**—இத்திருக்கோயிலில் சுவாமி சன்னதிக்கு முகப்பில் கிழக்கு நோக்கி இராஜகோபுரம்அமைந்துள்ளது. இக்கோபுரம் 125 அடி உயரம் உள்ளது. கோபுரத்தின் உச்சி தென்வடல் நீளம் 56 அடி, கிழமேல் அகலம் 15 அடி, உச்சியிலுள்ள கலசம் 7 அடி 4 அங்குலம்உயரம்உள்ளது. இக்கோபுரத்தில் ஒன்பது நிலைகள்உள்ளது. பார்ப்போர் கண்ணைக் கவரும் வகையில் சுதை வேலைப்பாடுகளுடன் கூடிய கோபுரமாக திகழ்கின்றது.

**8. விமானங்கள் :** இத்திருக்கோயிலிலுள்ள அருள்மிகு சங்கரலிங்க சுவாமி சன்னதியிலும் அருள்மிகு சங்கர நாராயணர் சன்னதியிலும் அருள்தரும் கோமதி அம்பிகை சன்னதியிலும் அருள்மிகு ஆறுமுக நயினார் சன்னதியிலும் உள்ள கருவறைக்குமேல் அழகிய சுதை வேலைகளுடன் கூடிய விமானங்கள் அமைந்துள்ளது.

**9. மண்டபங்கள் :** இத்திருக்கோயில் முகப்பில்அழகிய கல்யாண மண்டபம் அமைந்துள்ளது. 80 அடி நீளத்தில்முகப்பில் குடவரை மண்டபம் அமைந்துள்ளது. நவீன வசதிகளுடன் கூடிய கலையரங்கம் [திருமண மண்டபம்] அமைந்துள்ளது. அருள்மிகு நடராஜர் சன்னதியில் முகப்பில் உள்ள திருவிளக்கு மண்டபமும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

**தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்கவும்**

# சுவாமி விவேகானந்தரும் நாட்டு விழிப்புணர்வும்

'அருட்செல்வி'

## முன்னுரை

''புதிய இந்தியாவிற்கு அடிகோலியவர்களுள் சுவாமி விவேகானந்தர் முதன்மையானவர்'' என்று நம் தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் சுவாமி விவேகானந்தரைப் போற்றிக் கூறியிருக்கிறார். ''எழுந்திரு, விழித்திரு, கருதிய கருமம் கைகூடும்வரை உழைத்திரு'' என்று நம்மைத் தட்டியெழுப்பிய சுவாமி விவேகானந்தர் உண்டாக்கிய தேசிய விழிப்புணர்ச்சியை விரிவுபட விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## விவேகானந்தர் வற்புறுத்திய கல்வி

''ஒருநூறு இளைஞர்கள் எனக்குத் துணை வருவார்களேயானால் இந்தியாவை உலகின் முதல் நாடாக்கிடுவேன்'' என்று வீரமுழக்கம் செய்தவரே நம் வீரத்துறவி விவேகானந்தர். ஒரு நாடு — அதிலும் குறிப்பாக நம் பாரதநாடு முன்னேற்றம் காண வேண்டுமானால் தன்னம்பிக்கையை வளர்க்கும் ஆண்மை மிக்க கல்வி அனைவருக்கும் கற்பிக்கப்பட வேண்டும்—அதுவே நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படை என்று கூறியுள்ளார் நம் சுவாமி விவேகானந்தர்.

மேலை நாடுகள் முன்னேறியிருப்பதற்குக் காரணம் கல்வியே., நம் பாரதநாடு முன்னேற்றம் அடைய வேண்டுமானாலும் அனைவருக்கும்தேவை கல்வியே என்று கல்வியின் தேவையைக் கட்டாயப்படுத்தியிருக்கிறார் நம் சுவாமி விவேகானந்தர்.

> ''ஐரோப்பாவில் பல நகரங்களுக்கு நான் சென்றிருக்கிறேன். அங்கு ஏழைமக்களும் எவ்வளவு நாகரிகத்துடனும் சௌகரியத்துடனும் வாழ்கிறார்கள் என்பதைக் கவனித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் நம்நாட்டு ஏழைமக்களின் நினைவு என் மனத்தில் வர, கண்ணீர் சிந்தி அழுதிருக்கிறேன். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்ன! கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை''.

என்று சுவாமி விவேகானந்தர் கல்வியை வற்புறுத்தி நம் தேசத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கிய காரணத்தால்தான் இன்று பட்டிதொட்டியெங்கும் பள்ளிகளைக் காணுகின்றோம். கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகள் இல்லாத ஊர், திருவில் ஊர்; பள்ளியில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றெல்லாம் கூறும் அளவிற்கு இன்று அனைவரும் கல்வியின் தேவையை உணர்ந்திருப்பதற்கு சுவாமி விவேகானந்தர் உண்டாக்கிய விழிப்புணர்வே பயன்பட்டிருக்கிறது என்று உறுதியாகக் கூறலாம்.

மாணவர் மூளையில் பல விஷயங்களைத் திணிப்பதைக் கல்வி என்று இன்று பலர் கருதி வருகிறார்கள். அவர்கள் கல்வியின் உண்மைப் பொருளை உணராதவர்கள் என்பது சுவாமி விவேகானந்தர்தம் கருத்தாகும்.

''கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விசயங்களைத் திணிப்பது அன்று. வெறும் விஷயங்களைச் சேகரிப்பதுதான் கல்வி என்றால் புத்தக சாலைகள் அன்றோ பெரிய மகான்கள் ஆகியிருக்கும். அகராதிகள்அன்றோ ரிஷிகளாகி விடும்' என்று மனப்பாடக் கல்வியைக் கேலி செய்யும் நம் சுவாமி விவேகானந்தர் .

> ''மனிதனுடைய மனோசக்தியைத் தன் வயப்படுத்திப் பயன்படுத்தத்தக்க துறையில் செலுத்துவதே கல்வி எனப்படும். அத்தகைய ஆண்மை தரக் கூடிய கல்வியே நமக்குத் தேவை.''

என்று விழிப்புணர்ச்சியை ஊட்டியிருப்பதையும் நாம் நினைவு கொண்டால் நம்மைவிடவும் உயர்ந்தவர்கள் யார் இந்த உலகில் இருக்க முடியும்?

## சுவாமி விவேகானந்தர் உண்டாக்கிய பெண் சமத்துவம்

> ''மாதர் தம்மை இழிவு செய்யும்
>
> மடமையைக் கொளுத்துவோம்''

என்று பாரதியார் பாடினார். பெண் உரிமையைப் போற்றிய மகாகவி பாரதியார் சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையான சகோதரி நிவேதிதாவை மிகவும் போற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சகோதரி நிவேதிதா போன்ற அறிவில் சிறந்த ஆயிரமாயிரம் பெண்மணிகள் போற்றிய சுவாமி விவேகானந்தரே, இந்நூற்றாண்டில் பெண் உரிமைக்கு முதற் குரல் கொடுத்த சீர்திருத்தச் செம்மல் என்பது குறிப்பிடத்தக்கது.



''ஆண்களுக்கு எவ்வளவு சிரத்தையுடன் கல்வி புகட்டப்படுகிறதோ அவ்வளவு சிரத்தையுடன் பெண்களுக்கும் கல்வி புகட்டப்பட வேண்டும். ஜான்சிராணி தம் சேனைக்குத் தலைமை தாங்கி வீரத்துடன் போர் புரியவில்லையா! சங்கமித்ரா, லீலா, அகல்யாபாய், மீராபாய் போன்ற வீரத்தாய்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தற்காலத்திலும் வீரமும் சக்தியும் வாய்ந்த பெண்மணிகள் இந்நாட்டில் தோன்ற வேண்டும். அதற்குப் பெண் கல்வி இன்றியமையாதது'' என்று வற்புறுத்தியிருக்கிறார் நம் சுவாமி விவேகானந்தர். இன்று இந்தியாவில் பல்வேறு துறைகளிலும் பெண்கள் முன்னேறிப் புதுமைப் பெண்களாகச் சிறப்புற்று விளங்குகிறார்கள் என்றால் அதற்கு நம் சுவாமி விவேகானந்தர் ஊட்டியவிழிப்புணர்ச்சி அல்லவா காரணம்.

### மத ஒருமைப்பாட்டில் நம் சுவாமிகள் உண்டாக்கிய விழிப்புணர்ச்சி

அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் 1893 ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வமதக் கருத்தரங்கில் கலந்து கொண்ட நம் வீரத்துறவி விவேகானந்தர் 'அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!' என்று அழைத்து உலக ஒருமைப்பாட்டு உணர்வை விதைத்தார் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று.

இன்றைக்குச் சரியாக 100 ஆண்டுகள் நிறைவு பெறும் இந்நன்னாளில் சுவாமி விவேகானந்தர் உண்டாக்கிய மத ஒருமைப்பாட்டு உணர்வு தழைத்திருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் வருத்தத்துடன் ஒத்துக் கொள்ள நேரிடுகிறது. பாபர் மசூதியை இடி, இராமர் கோயிலைக் கட்டு என்பதெல்லாம் சுவாமி விவேகானந்தருக்குப் பிடிக்காதவை ஆகும். மதச்சண்டையை மகான் விவேகானந்தர் ஒரு போதும் வரவேற்றதில்லை. ''மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்'' என்று வற்புறுத்தியவர் நம் வீரத்துறவி விவேகானந்தர். சமயப் பூசல் தீர, சகோதர நேசம் உண்டாக, கீழ் வரும் சுவாமி விவேகானந்தரின் அறவுரையை நாம் ஒவ்வொருவரும் உள்ளத்தில் பதித்துக் கொள்வது மிகமிக அவசியமாகும். மத ஒருமையை வற்புறுத்தும் மகான் விவேகானந்தரின் மாணிக்க வரிகள் இவை:

> ''நாம் வேற்றுமையை அகற்றி ஒற்றுமையைக் கடைப்பிடிப்போமாக. எம்மதத்தையும் புறக்கணிக்காது ஏற்றுக் கொள்வதே நம்எண்ணமாக இருக்கவேண்டும். அவற்றைச் சகித்துக் கொள்வோம் என்பதன்று. ஏனெனில் அச்சகிப்பு, பிறமதங்கள் தாழ்ந்தவை என்ற எண்ணத்தால் ஏற்படுகிறது. நீங்கள் அவ்விதம் நினைத்தால் அது கடவுள் பால் செய்யும் அபசாரம் அன்றோ? நான் உலகில் தோன்றியுள்ள மதங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறேன். அவை எல்லாவற்றையும் நான் பின்பற்றுகிறேன்.''

இந்த ஒரு அறிவுரையல்லவா உலகிற்கு வேண்டிய ஒப்பற்ற அறிவுரை. உலகு பின்பற்ற வேண்டிய பொன்னுரை.

### நிறைவுரை

''அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய்.''

என்று மகாகவி பாரதியார் நிவேதிதா தேவியை வாழ்த்தும் வாழ்த்துப்பாடல், நம் வீரத்துறவி சுவாமி விவேகானந்தருக்கும் பொருந்தும் பாடல் ஆகும். வாராது வந்த மாமணியாம் நம் வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் திருநாமத்தைப் போற்றி அவர் காட்டிய விழிப்புணர்ச்சிப் பாதையில் வெற்றி நடைபோட்டுச் சென்றிடுவோமாக.

## முதற்கடமை

**முதலில் கடவுளைத்தேடு;**

**பிறகு உலகப் பொருட்களைத் தேடு**

—இராமகிருட்டிணர்.

# கீதைக் குறள்கள்

அறநெறியண்ணல் கி.பழநியப்பனார்

முப்பொருள் விளக்கம்

(குறிப்பு:—'பரந்தாமா? சாத்திர விதிகளை அறியாது வேள்வி செய்வோர் நிலை என்ன? சத்துவமா! இராசதமா! தாமதமா!'' என்று அருச்சனன் தன் ஐயப்பாட்டைக் கூறினான்.) (17/1)

உடலினைச் சார்ந்த உயிர்களை என்றும்
தொடர்ந்துமுக்கு ணங்கள்பற் றும் (17[2)

இயல்பாய் அமைவதாம் என்பர் இதனை;
உயர்வும்தாழ் வும்சேர்ந்த தாம் (17[3)

சாத்விகர் சாந்தநிலைஈசனையே எஞ்ஞான்றும்
ஏத்தி வழிபடு வர் (17[4)

இராசதர் ஆயுதம் ஏந்தும் இயக்கர்
இராட்ச தரைவணங்கு வர். ( ,, )

தாமதர்பூ தங்களையே தக்கவழி பூசித்தல்
ஏமமென வாழ்ந்திடு வர். ( ,, )

சாத்திரவி ரோதத் தவமெலாம் ஆணவத்தில்
பூத்த செயல்களே யாம். (17[5)

அவையாவும் காமத்தின் ஆணவக் கூற்று;
அவைபற்றை நீக்காது காண். ( ,, )

தன்னுடலைத்தானே வருத்தும் கொடுமையாம்
தன்மைஎன்னை யும்வருத்தி டும். (17[6)

மூவுணவின் தன்மைகள், மூவகையாம் வேள்விதவம்
மேவுகொடை பற்றியுங் கேள். (17[7)

உடல்நலம் ஓங்கிவளர் ஆயுள் அறிவுத்
திடமும் கொடுப்பன வும். (17[8)

சத்தும் சுவையும் மிகுந்தனவும் சாத்விகர்
மெத்த விரும்பும் உணவு. ( ,, )

உப்பு கசப்பு உறைப்பு புளிப்புடன்
வெப்பம் மிகுந்தன வும் (17[9)

துன்பம் துயருடன் நோயும் தருவன
என்றும் இராசதர் ஊண். ( ,, )

எச்சில் பழையன எந்த.உணவையும்
நச்சியுண் பர்தாம தர். • (17[10)

கடமையாம் என்றும் விதிமுறை கண்டு
திடமனத்து டன் வேள்வி கள் (17[11)

பயனெதிர் பாராது நம்பித் துணிந்து
வியந்துசெய்தல் சாத்விக மாம். ( ,, )

பயனைக் கருதி இராசதம் பாரினர்
வியக்கவே வேள்விசெய்யு மாம். (17[12)

மந்திரம் தானமும் இன்றி மதியிழந்து
சத்தின்றி தாமதம்செய் யும். (17[13)

அத்தனை அந்தணரை ஆசானை ஞானிகளைப்
பத்தியுடன் போற்று தலும், (17[14)

பிருமச் சரியம் பிறவுயிர்கொல் லாமை
ஒருவன் உடல்செய் தவம். ( ,, )

சினம்தந் திடாப்பேச்சும் வாய்மையும் மற்றும்
மனத்திற் கினியசொல் லும், (17[5)

ஆக்கம் தருசொல்லும் ஆன்றமறை ஓதுதலும்
வாக்கால் செய்யும் தவம். . ( ,, )

மனத்தூய்மை அன்புடமை நேர்மை மவுனம்
மனத்தினால் செய்யும் தவம்.. (17[16)

எத்தவமும் எப்பயனும் நோக்காது செய்வது
உத்தம சாத்விக மாம். (17[17)

தற்பெருமை நாடியே செய்யும் தவமெலாம்
அற்ப இராசத மாம். (17[18)

தன்னை வருத்தியும் தாமதம் மற்றவர்
துன்புற வேண்டியும்செய் யும். (17[19)

தக்கார்க்குச் செய்யும் எதிர்நோக்காத்தானமே
முக்காலும் சாத்விகத்தா னம். 17[20)

எதிர்நோக்கி யும் மனம் இன்றியும் ஈதல்
மதியில் இராசதா னம் (17[21)

தகாதார்க்குத் தானம் தகாமுறை செய்தல்
தகாத் தாம தத்தான மாம். (17[22)

ஒன்றாம் பிருமமே ஓம்தத்சத் மூன்றுமாய் .
நின்றிடும் என்ப தறி. (17[23)

வேதம் பிரமாணம் வேள்வி பிறக்குமிடம்
நாதமாம் ஓம்தத்சத் தாம். ( ,, )

வேதகர்மம் நன்று விளங்கிட ஓமென்ற
நாதத் துடன்தொடங்கு வர். (17[24)

தவம்வேள்வி தானம் பயன்கரு தாமல்
உவந்துதத் என்று தொடங்கு வர். (17[25)

சத்தியமாம் சத்ஒலி நன்மை பயக்குமென
பத்தியுடன் கூறிச்செய் வர். (17[26)

வேள்விதவம் தானம் விளங்கு பிருமத்தின்
நாட்கருமம் யாவுமே சத். (17[27)

அசத்தாகும் அக்கரை இன்றிச்செய் கர்மம்
நசமாம்இம் மைமறுமைக் கே. (17[28)

(தொடர்ந்து வரும்)

# குலசேகரரின் கிருஷ்ணாநுபவம்

திருக்குடந்தை சௌரிராஜ திருவேங்கடத்தான்

எம்பெருமானுடைய விபவாவதாரங்களில் ஸ்ரீராம கிருஷ்ணாவதாரங்களிடத்திலும், அர்ச்சாவதாரங்களில், திருவரங்கம், திருவேங்கடம் திருக்கண்ணபுரம், திருச்சித்திரகூடம், திருவித்துவகோடு முதலிய திவ்ய தேசத்து எம்பெருமான்களிடத்திலும் தீராத காதல் கொண்டவர் குலசேகரப்பெருமாள்.

பகவானைக் கட்டிலும், அவன் அடியார்களை ஆராதிப்பது சிறந்தது என உணர்ந்து, ஸ்ரீவைஷ்ணவர்களை உபசரித்து, வாழ்ந்து காட்டியவர், பெருமாள் திருமொழியில் சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் மிகவும் ஈடுபட்டு மூன்று பதிகங்கள் அருளிச் செய்தபோதிலும், ஒரு பதிகத்தில் 'வன்தாளிணை' என ஆரம்பித்து, .ஸ்ரீராமனை முழுமையாக அனுபவித்தார். மற்ற இரண்டு பதிகங்களில் விபவத்தோடு, அர்ச்சையும் சேர்த்து, திருக்கண்ணபுரத்து எம்பெருமானையும், திருச்சித்ரகூடத்து எம்பெருமானையும் ஸ்ரீராகவனாக கண்குளிரக் கண்டார். ஆனால், இரண்டு பதிகங்கள் முழுமையாக விபவக் கண்ணனையே எண்ணி அனுபவித்தார்.

உகந்தருளிய திருப்பதிகளைப் பாடி மகிழ்ந்தவுடன், திருவாய்ப்பாடியில் கண்ணனோடு வாழ்ந்து அவனிடத்தில் ஈடுபட்ட பெண்களில் ஒருத்தியாகத் தம்மை ஆக்கிக் கொண்டு ''ஏர்மலர்ப் பூங்குழல்'' என்று தொடங்கி, ஒரு பதிகத்தில் அற்புதமாக கிருஷ்ணாநுபவம் செய்கிறார். இடக்கைக்கும் வலக்கைக்கும் வாசி அறியாத ஒரு ஆயர்குலப் பெண் அருகே தானும் அமர்ந்து, தயிர் கடைய ஆசைப்பட்ட கண்ணனுடைய லீலைகளை, குலசேகரர் 'கெண்டையொண் கண் மடவாளொருத்தி'' என்ற பாசுரத்தில் அழகாக அருளிச் செய்கிறார். பூதனை உயிருண்ட விருத்தாந்தத்தை 'பேய் முலைவாய் வைத்து நஞ்சை உண்டு' எனப் பேசுகிறார்.

''ஆலை நீள் கரும்பு'' என்ற பதிகத்தில் கண்ணனது பால லீலைகளை அனுபவித்து யசோதை பெற்ற இன்பத்தை, காணப்பெறாத தேவகியின் நிலையை அடைந்து வருந்தி, அந்த எண்ண அலைகளை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார். அவருக்கு நிகராக யாரும், அந்த தேவகியின் மன நிலையை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை.

ஓர் அனுபவம் கண்ணனிடம், அன்புள்ள ஆயர்குலப் பெண்கள் அவனைச் சூழ்ந்து, 'உன் தகப்பனார் யார்? எங்களுக்குக் காட்டு' எனக் கேட்க, அக்குழந்தை, தன் சிவந்த விரலால் நந்தகோபரைக் காண்பித்து கண்களாலும் அவரை நோக்கினானாம்.


தான் கண்ணனைப் பெற்ற போதிலும், அவனை வளர்க்கக் கொடுத்து வைக்கவில்லை: அதுபோல வாசுதேவருக்கும் அந்த பாக்கியம் கிடைக்கவில்லையே என அங்கலாய்த்து, 'முந்தை நன்முறையின்' என்ற பாசுரத்தில்,

''உந்தையாவ னென்றுரைப்ப நின் செங்கேழ்
விரலினும் கடைக்கண்ணினும் காட்ட
நந்தனன் பெற்றனன்; நல்வினையில்லா
நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே' என

நல்ல தவப்பயனாய் நந்தகோபர் பெற்றார், அந்தப் பலன் இல்லாததால், வசுதேவர் பெறவில்லை என்று தங்களையே நொந்து கொள்கிறாள். 'ஏர் பிடித்தவன் என்ன செய்வான்! எல்லாம் பானை பிடித்தவள் பாக்கியம்' என்று தேவகி வருந்துகிறாள்.

மற்றொரு அனுபவம்-குழந்தை கண்ணன் ஆடி ஆடிக்கொண்டு தன்னுடைய சிறு பாதங்களால் மெள்ள நடந்து வருகிறான். அவன் நெற்றியுள் உள்ள சுட்டியின் பதக்கங்கள் அதற்கேற்ப அசைகின்றன. அந்த அழகைப் பருகி யசோதை அவனை வாரி அணைத்து முத்தம் கொடுக்கிறாள். அந்தப் பேறு தனக்குக் கிடைக்கவில்லையே என்பதை, ''மருவும் நின் திருநெற்றியில் சுட்டி' என்ற பாசுரத்தில் ''திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம்தெய்வ நங்கை யசோதைபெற்றாளே'' என்று தனக்கு பாக்கியம் இல்லாததால், தனக்கு அந்த பேறு கிடைக்கவில்லை என்ற தேவகியின் ஆற்றாமையை நமக்கு எடுத்து உரைக்கிறார்.

மற்றொரு ரஸானுபவம்:—தனக்குக் கிட்டவில்லை என தேவகி வருந்துகிறாள். அதாவது கொஞ்சம் வயது வந்தவுடன், கண்ணன் தன் சிறிய திருக்கைகளால் வெண்ணையை யார்க்கும் தெரியாமல் சாப்பிட்டதைக் கண்டிக்கும் வகையில் யசோதை, ஒரு சிறிய கயிற்றைக் கையில் வைத்துக் கொண்டு, அவனை



அடிக்கப் புகுகிறாள்.. கண்ணன் அவள் அருகே வருகிறான். தன்னை யசோதை நன்றாக அடித்து விடுவாளோ எனப் பயப்படுவது போல் பாசாங்கு செய்கிறான். வெளுத்த தயிர், அவன் சிவந்த வாயில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அழுகை வருவது போலத் தன் பார்வையை யசோதையை அஞ்சி நோக்கி, தன் இரு கைகளையும் சேர்த்து, அவளுக்கு ஓர் அஞ்சலி செய்கிறான். இந்தக் கண்ணனின் நிலையைக் கண்டு, அனுபவித்த யசோதை, இறுதி காண முடியாத, இன்பத்தின் எல்லையை இங்கு அடைந்தாள். சகல தேவர்களாலும் துதிக்கப்படும் அந்த பரமன், இங்கு யசோதையைத் தொழுகிறான். என்ன ஆச்சரியம் என்று தேவகியின் நிலையில் குலசேகரர் அருளிச் செய்கிறார். இந்த நயங்கள் கொண்ட பாசுரத்தை அனுபவித்து, அந்த எல்லையில்லாத இன்பத்தை நாமும் பெறுவோம்.

''முழுதும் வெண்ணெயளைந்து
தொட்டுண்ணும்
முகிழிளஞ் சிறுத் தாமரைக்கையும்
எழில் கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு
எள்கு நிலையும்
வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்சிறுவாய் தெளிப்பதுவும்
தொழுகையும் இவை கண்ட யசோதை
தொல்லையின்பத்து இறுதிகண்டாளே''

இப்படி, கண்ணனது பல பால லீலைகளைக் காணப் பெறாத தேவகியின் மூலமாக; குலசேகரப் பெருமாள் நாம் கண்டு களிக்கும்படி செய்கிறார். ஸ்ரீராமனைப் போல, கண்ணனிடமும் அவருக்கு, மிகுந்த ஈடுபாடு இருந்தது. கடைசியில் பிரும்மதேசம் என்கிற மன்னார் கோயிலை அடைந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீராஜகோபாலனுக்குத் தொண்டு செய்து வழிபட்டு பரமபதம் அடைந்தார் என்பதிலிருந்து, குலசேகரப் பெருமாளுக்கு, ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் உள்ள ஆராத பக்தியை நம்மால் கண்டு கொள்ள முடிகிறது.

# திருக்கண்டியூர் வீரட்டானம்

கோயிற் கலைச் செல்வர் தி. இராசமாணிக்கம்

காவிரியின் தென் கரையில் உள்ள 12-வது தலமான திருக்கண்டியூர் தஞ்சாவூரினின்றும் திருவையாறு செல்லும் வழியில் உள்ளது. இது சப்ததலங்களில் ஒன்றுமாம் :

### புராணப் பெருமை

திருமாலும் பிரமனும் தம்மில் யார் பெரியவர் என வாதிட்டுப் போரிட, அதனை விலக்க அவர்களுக்கு இடையில் சிவபெருமான் தீ மலையாகத் தோன்றினான். தம்முடையமுடி அல்லது அடியை யார் முதலில் காண்கிறாரோ, அவரே பெரியவர் என அவர்கள் இருவரும் முடிவு செய்தனர். திருமால் பன்றி உருவில் நிலத்தைத் தோண்டி கீழே சென்று அடியைத் தேட பிரம்மா அன்னமாகி ஆகாயத்தில் பறந்து முடியைக் காண முயன்றான். இருவரும் தம் முயற்சியில் தோல்வியே அடைந்தனர். திருமால் தன் தோல்வியை ஒப்புக் கொள்ள பிரம்மா தான் முடியைக் கண்டதாகக் கூறி, அதற்குத் தாழம பூவினைச் சாட்சிக்கூறச்செய்தான். இவ்வாறு அவன் பொய் சொன்னமைக்காக, இறைவன் வைரவரைத் தோற்றுவித்து அவன் தலையைக் கிள்ளி எறியச் செய்தான். இது வைரவரால் செய்யப்பட்டாலும், சிவபெருமானது செயலாகவே போற்றப்படுகிறது.

### இலக்கியச் சிறப்பு

இறைவனின் இணையில்லா எல்லையில் பேராற்றலை உணர்த்தும் இப்பெருஞ் செயலை தேவாரம் பாடிய மூவரும் வியந்து பாடியுள்ளனர். உதாரணமாக:

''ஆதிக்கண்ணான் முகத்தில் ஒன்று செற்று
அல்லாத சொல் உரைக்கத் தன் கை வாளால்
சேதித்ததிருவடியை'' (திருநள்ளாறு—1)

என அப்பர் அருளியுள்ளார்.

இதனைச் சம்பந்தர் 29 இடங்களிலும் அப்பர் 35 இடங்களிலும், சுந்தரர் 5 இடங்களிலும், மணிவாசகர் திருவாசகத்தில் 4 இடங்களிலும் திருக்கோவையாரில் 5 இடங்களிலும் குறிப்பிட்டுள்ளனர். இதினின்றும் அப்பர் அடிகள் தாம் இப்பெருத்த செயலை பெரும் அளவில் போற்றியுள்ளார் என்பது புலனாகிறது:

### திருக்கோயிலின் அமைப்பு

மேற்கு நோக்கி அமைந்துள்ள இந்தக் கோயில் கருஅறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், இரு திருச்சுற்றுகள் ஆகியவற்றைக் கொண்டது. முதல் சுற்றில் வாயிலுக்கு வலப்புறமாக, அம்மன் சன்னதி தனியாக உள்ளது. இது முற்காலத்தில் இறைவன் சன்னதியாக இருந்து, பின்னர் அம்மன் சந்நிதியாக மாற்றப்பட்டுவிட்டது. அன்னையின் திருப்பெயர் மங்கலநாயகி என்பது. இறைவனது திருநாமங்கள் வீரட்டேசுவரர், பிரமசிரக்கண்டீசுவரர் என்பன.

எண்பெரும் வீரட்ட தலங்களில் இங்கு மட்டும் சம்ஹாரமூர்த்தியின் செப்பு சிலை வடிவம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கலைப் பெருமை

இங்குக் காண வேண்டிய கலைச் சிறப்புமிக்க வடிவங்களில் ஒன்று பிரமனுடையது. இவனது 4 கைகளில் இரு கைகள் ஆகம விதிகளுக்கு வேறுபட்டு வணக்கத்தைத் தெரிவிக்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கட்டுள்ள உடல் அமைப்புடன் உயிர்க் கலைத் ததும்பும் இந்தச் சிலை வடிவம் பெரிய அளவிலானது.

அடுத்துக் காண வேண்டியவை கருவறைக்கு இருமருங்கிலும் உள்ள (வாயிற் காப்போர்களுக்குப் பதிலாக) முருகனது திருவுருவங்களாம். வலப்புறம் உள்ள வடிவின் கையில் அக்கமாலை இருப்பதால் 'ஞான ஸ்கந்தர்' என்றும், இடப்புறம் உள்ள வடிவின் வலக் கைகளில் சக்தி இருப்பதால், 'வீரஸ்கந்தர்' என்றும் அழைக்கப் பெறுகின்றன. இது எங்கும் இல்லாத ஒரு அரிய அமைப்பாகும்.

இரண்டாவது திருச்சுற்றில் கிழக்கு புறமாக உள்ள அர்த்தனாரீசுவர வடிவம் சிறப்புமிக்க ஒன்றாம். ஆகம விதிகளின்படி, ஏனைய தலங்களில் இந்த வடிவம் நின்ற திருக்கோலத்தில் தான் காணப்படும். ஆனால் இங்கு மட்டும் உட்கார்ந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. சிவனது ஊர்தியான காளையும் படுத்த நிலையில் காணப்படுகிறது.

# பெருமாயன்

ஆர். பி. சாரதி,
எம்.ஏ., எம்.எட்.



பேர்கள் ஆயிரம் உடைய பெருமாளைச் சங்க இலக்கியம் மிகச் சிறப்பாகக் குறிப்பிடும் மாயோன்என்ற பெயர் மனதைக் கவரவல்லது.

'மாயோன் மேயக் காடுறை உலகம்'—
தொல்காப்பியம்
'மாயோன் மேய ஓண நன்னாள்'—
மதுரைக் காஞ்சி

இதே மாயோன் என்ற பெயர் மாயவனாக இளங்கோவடிகள் பாடிய சிலம்பில் சிறப்பிக்கப் படுவதும் சிந்தனைக்குரியது.

''கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்''
''பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவன்''
கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
''பெரியவனை மாயவனை''

திருமால் அவதாரங்களில் மாயச்சாயல்கள் விரவிக் கிடப்பனவே என்றாலும் கிருஷ்ணா வதார மாயங்கள் மிக அதிகம்.

இரணியன் தூண்புடைப்ப அன்று ஆங்கே
அவன் வீயத்தோன்றிய சிங்கமும்
மாயச்சிங்கந்தான்;
மண்ணும் விண்ணும் கொண்ட குறளன் மாயம்
சிறப்பானதுதான்.
நம்மாழ்வாரும் 'மாணியாய் நிலம் கொண்ட
மாயன்' என்று வியக்கிறார்.

இந்த வாமனாவதாரத்தைக் கம்பநாட் டாழ்வார் பாடும்போது 'ஆலமர் வித்தின் அருங்குறளான்' என்றே பாடுகிறார்.

அணி தேர்ப் புரவி, ஆட்பெரும்படையுடன் மன்னர்களுக்கு நிழல் தரும் ஆலமரத்தின் விதை மிகமிகச் சிறியது. தெள்ளிய ஆலின் சிறுபழத்தொரு விதை மரமாக வளர்வது இயற்கையிலேயே நிகழும்போது வாமனன் விக்கிரமனாக உயர்ந்து "மின்னார் மணிமுடி போய்விண் தடவ மேலெடுத்த பொன்னார் கணை கழற்கால் ஏழுலகும் போய்க் கடந்து அங்கு ஒன்னா அசுரர் துளங்கச் செலநீட்டி, 'அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்தது' வியப்பாயினும் பெரு வியப்பல்ல.... மாயமா யினும் பெருமாயம் அல்ல.

இராமாவதாரத்தில் மாயமான் மாயச் செற்றதும், மரங்களேழைச்சரத்தால் துளைத்த தும் மாயம் எனக்கருதினாலும், இராமவதாரத் தில் மாயத்தைவிட மனித நேயமே மேலோங்கு கிறது. மாயம் வல்ல மழிசை யாழ்வாருக்குக் கிருஷ்ணாவதாரம் முழுதுமே மாயம்?

''ஆயனாகி ஆயர்மங்கை வேய் தோள்
விரும்பினால்
ஆம், நின்னை யாவர் வல்லர்' அம்பரத்தொடு
இம்பராய்
மாய? மாய மாயைகொல்? அதன்றி நீ
விடுத்தலும்
மாய மாயமாக்கினாய் உன் மாயமுற்றும்
மாயமே?''

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி 'மாயனை' என்றும் 'மாமாயன்' என்றும் திருப்பாவையில் குறிக்கிறாள் கண்ணனை.

ஆண்டாள் கண்ணனை மாயனாகக் கண்ட தற்குக் காரணம் தந்தை பெரியாழ்வார் கற்றுத் தந்த பாடம்?

ஆம். அவர்தம் முதல் திருமொழி அவ தாரச் சிறப்பு ஏழாம் பாடலிலேயே

''வாயுள் வையகம் கண்ட மடநல்லார்....
மாயன் என்று மகிழ்ந்தனர்''...

என்று பாடி விடுகிறார்.

யசோதையாவது நாக்குவழித்து நீராட்டும் போதுதான் கண்ணன் வாயுள் வையகம் காண் கிறாள். ஆயர் மாதர் தொட்டிலிலேயே இனங்காணும் பேறு பெற்று விடுகின்றனர்.

கண்ணன் மாயன் என்பதைத் தந்தையும், மகளும் உறுதி சொல்வது போலப்பிற ஆழ்வார் களும் அவன் மாயம் கண்டு மனம் மகிழலாம், நெகிழலாம். அவனுடைய அலகிலா அருள் விளையாட்டில் எது மாயம்! எது பெரிய மாயம்

என்பதை ஆழ்வார்களின் ஈரத்தமிழ்ப் பாசுரங்களில் ஆழ்ந்து, நனைந்து, நினைந்து, மகிழ்வது சிறப்பான பக்தி அநுபவம்.

மாயன் கண்ணனை மாமாயன் ஆக்குவது எது என்பதை அறிய அவன் மாயங்களை முதலில் நாம் அறிய வேண்டாமா!

நமக்குத்துணையாக வருபவர் நம்மாழ்வார் தாம்!

திருவாய்மொழி ஆறாம் பத்தில், நான்காம் திருவாய்மொழிப் பாடல்களில் கண்ணன் மாயங்கள் பரக்கப் பேசப்படுகின்றன.

''குரவை ஆய்ச்சியரோடு சேர்ந்தும், குன்றம் ஒன்று ஏந்தியதும்
உரவு நீர் பொய்கை நாகம் காய்ந்ததும்உட்பட மற்றும் பல
அரவிற் பள்ளிப்பிரான் தன் மாயவினைகள்''..

பட்டியல் மேலும் அடுத்துவரும் பாசுரங்களிலும் தொடர்கிறது. மாயக்கோலபிரான் தீங்குழல் ஊதியது, நிரை மேய்த்தது, பின்னை தோள் மணந்தது, வாணன்தோள் துணித்தது, மல்லரைச் செற்றது, களிறு அட்டது, வஞ்சப் பெண்சாவப் பால்உண்டது. சகடம் சாடியது, நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க இரங்கியது, பிறந்தது, ஆய்க்குலம் புக்கது, கஞ்சனைவஞ்சம் செய்தது, புள் பிளந்தது, ஏறு செற்றது. பாரத மாபெரும் போர் பண்ணியது........

கண்ணன் மாயங்களை நினைப்பதனாலேயே ஆழ்வார்க்குக்கலக்கமில்லையாம். நிகர் எவரும் இல்லையாம். அவருக்குக் கண்ணனல்லால் நாயகரும் எவருமில்லையாம். மேலே பட்டியலிட்ட கிருஷ்ண லீலைகளில் பெருமாயம் எது! ஆழ்வாரால் விடை கூற முடிகிறதா?

கிளரொளி மாயன்
மாயப்பிரான்
கள்ள மாயன்
மணி மாயன்
நெடு மாயன்
கடிய மாயன்

என்றெல்லாம் சொல்ல முடிகிறதே தவிர முடிவுக்கு வர முடியவில்லையே?

''ஒத்தார் மிக்கார் இலையாய மாமாயா....

அத்தா, நீ செய்தன அடியேன் அறியேனே?''

'மாமாயா' என்று விளிக்கத் தெரிகிறது, எது மாமாயம் என இனங்காண இயலவில்லை. கண்ணன் ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓரிரவில் ஒருத்தி மகனாய் வளர்ந்ததே மாயம். எனவே ஆழ்வார், திகைப்பு அடங்கவில்லை. .

''பிறந்த மாயா! பாரதம் பொருத மாயா! நீ இன்னே
சிறந்த கால், தீ நீர், வான், மண் பிறவு மாய பெருமானே''

(பிறவும் ஆ (கி)ய என்பது பிறவு மாய என வருவது நயம்)

கறந்த பாலுள் நெய்யே போல் இவற்றுள் எங்கும் கண்டு கொள்
இறந்து நின்ற பெருமாயா! உன்னை எங்கே காண்கேனே!''

நம்மாழ்வார் வாய்மொழிக்கு ஆறங்கம் விளக்கம் கூற வந்தவர் என்றே போற்றப்படும் கலியன் ஒலிமாலை மலர்களை உதவிக்கு அழைத்து மாமாயம் எது என உறுதி செய்ய முயல்வோமா ?

'எங்காணும் ஈதொப்பதோர் மாயம் உண்டே'' என்று மாயங்களுக்கெல்லாம் சவால் விடுகிறார்

உலகத்து அறநூல் விரித்தவன்
உலகேழ், மலையேழ், கடலேழ் உண்டவன்
மாகடல் கடைந்தவன்
மதுகைடவரை அழித்தவன்
இரணியனை உகிரால் பிளந்தவன்
மாண் குறளாய் மண் கொண்டவன்
உலகேழ் ஆண்டவன்
மழுவால் ஆயிரந்தோள் அளித்தவன்
குரக்குப் படையொடு கடல் கடந்தவன்
வில்லிறுத்து அவளை அணைத்தவன்
இலங்கை அரக்கர் தோள் துணித்தவன்

இவ்வளவும் இதற்கும் மேலும் பெருமை பெற்றவன் செய்வானா அதை!

எங்காணும் ஈதொப்பதோர் மாயம் உண்டே
அவன் காண்மின்?
மேலே கூறிய சிறப்பெல்லாம் உடைய அவன்
இன்று ஆய்ச்சியரால்
அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தானே?

மாயத்துள் மாயம், பெருமாயம் யசோதையால் கட்டுண்டிருந்த எளிமைதான். வடவரையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கிக் கடல் வயிறு கலக்கியகை யசோதையால் கட்டுண்டது தானே சிலம்பின் ஆய்ச்சியர் குரவை முன்னிலைப் பரவலில் முதலில் பாடப் பட்டது!

மங்கை மன்னன் மற்றொரு பாடலும் கண்ணன் களத்தில் கட்டுண்ட எளிமை நயம் புகழ்கிறது.

வண்ணம் கருங்குழல் ஆய்ச்சியால் மொத்துண்டு...

கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டான் ஆகிலும்
எண்ணறற்கரியன் இமையோர்க்கும் சாழலே!

சிறியவர் பெரியவராக ஓங்கி வளர்வது மாயம்

பெரியவர் சிறியவராக அடங்கி ஒடுங்கி இறங்கி வருவது பெருமாயம்?

திருமங்கையாழ்வார் ஈதொப்பதோர் மாயம் உண்டே! என்று கேட்டு விடை தெளிந்தது எவ்வாறு!

“பத்துடை அடியவர்க்கு எளியவர், பிறர் களுக்கு அரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறல் அடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உர விடை யாப்புண்டு
எத்திறம்? உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே?”

என்ற கண்ணனின் சௌலப்யத்தை எளியோர்க்கும் இரங்கும் மோகித்துக் கிடக்கச் செய்யும் பண்பை நம்மாழ்வார் திருவாய்மொழியில் குறிப்பில் சொன்னதை உணர்ந்து கலியன் உரலில் தானே விரும்பி கட்டுண்ட மாயமே ஒப்பிலா மாயம் என உறுதிசெய்தார். அவனே விரும்பினாலன்றி அம்மாயவனைக் கட்டி விட முடியுமா?

நம்மாழ்வாரின் திருவடி என்று போற்றப் படுகின்ற மதுரகவி ஆழ்வாரும் இதைத் தெள்ள தெளிவாக உறுதிபட உரைக்கிறார். நம்மாழ்வாரை யன்றி தேவு மற்று அறியாத மதுரகவி ஆழ்வார்

‘கண்ணி நுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன்’

என்றே தொடங்குகிறார். ஆனால் அவருக்கு அந்தப் பெருமாயனைவிட மாறன் எனும் மாயன்தான் மனமுழுதும் நிறைந்திருந்தார் என்பது வேறு விஷயம்?

## பெருமை எதற்கு....?



மக்களில் ஒரு சிலர் தங்களுடைய பணம், அதிகாரம், பெயர், புகழ் ஆகியவைகளைப் பற்றி மிகவும் பெருமையடித்துக்கோள்கிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் ஒரு சில நாட்களுக்கு மட்டுமே நிலைத்திருக்கப் போகின்றன. அவர்கள் இறந்த பிறகு இவைகளில் ஒன்று கூட அவர்களைப் பின்தொடர்ந்து போகப்போவதில்லை.

—இராம கிருட்டிணப் பரமஹம்சர்.

## விழிப்புடன் இரு

விஷப்பாம்புகள் நடமாடும் வீட்டில் வசிப்பவர்கள் எப்போதும் மிக ஜாக்கிரதையுடன் இருப்பதைப்போல் இவ்வுலகில் வாழும் மக்கள் காமத்திற்கும், பண ஆசைக்கும் அகப்படாமல்எப்போதும் மிகமிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

—இராமகிருட்டிணர்



12ஆம் பக்கத் தொடர்ச்சி

**10. கட்டிடக் கலை :**

இத்திருக்கோயில் ''சாலிவாகன சகாப்தம் 945 (கி.பி. 1022) கொல்லம் 199-ல் மதுரை பாண்டிய அரசச்சேகரம் உக்கிரபாண்டிய அரசர் மானூருக்கு வந்து அதற்கு சமீபமாய் உக்கிரன்கோட்டையை அமைத்து அரசாண்ட காலத்தில் கட்டப்பட்டது எனக் கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகிறது. பாண்டியர்களால் கட்டப்பட்ட மண்டபங்களும் அவைகளிலுள்ள மன்மதன் இரதி, காப்பறையன் சிலைகளுக்குள்ள தூண்களும் கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

**11. சிற்பங்கள், ஓவியங்கள் :** கல்லாலாகிய கோமதியம்மை திருவுருவம் பார்க்கப் பார்க்க உள்ளத்தைக் கவரும் காட்சியாக விளங்குகிறது. கல்லாலாகிய கூத்துடைப் பெருமான் திருவுருவமும் சிவகாமியம்மையார், காரைக்காலம்மையார் திருவுருவமும் அம்பலத்தின் முன் நின்று காண்போர் மனத்தைக் கொள்ளைக் கொள்ளும் பேரழகுடையன.

இத்திருக்கோயிலின் சுவாமி சன்னதி நுழைவு வாயிலுக்கு வடபுறம் பூலித்தேவர் அறை உள்ளது. அழகிய சிற்பங்கள் அமைந்த மரத்தினால் செய்யப்பட்ட அறையாகும். இம்மரத்திலான அறை கல்லில் செதுக்கப்பட்ட அறைபோல் காட்சி அளிக்கிறது.

அருள்மிகு சங்கரநாராயணர் திருவுருவம் அரனும், அரியும் சேர்ந்த உருவ அமைப்பைக் கொண்டது. மேற்படி திருவுருவில் சங்கரராகவும் இடப்பாகத்தில் நாராயணராகவும் மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற திருவுருவம் இந்தியாவில் வேறு எங்கும் கிடையாது.

சந்திரமௌளீஸ்வரர் என்ற ஸ்படிகலிங்கம் அருள்மிகு சங்கரநாராயணர் சன்னதியில் உள்ளது. மேற்படி ஸ்படிகலிங்கம் இந்தியாவில் ஐந்து இடங்களில் உள்ளதில் இது ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அருள்மிகு சங்கரநாராயணர் சன்னதியில் உள்ள சோடஷவிநாயகர், சுப்பிரமணியர் போன்ற அழகு ஓவியங்கள் மிகவும் சிறப்பானதாகும்.

**12. பூஜைகளும், திருவிழாக்களும் :—**

இத்திருக்கோயிலில் காமிகாகமப்படி பூஜைகள் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நாளும் திருவனந்தல், விளா பூஜை, சிறுகால சந்தி, கால சந்தி, உச்சிக் காலம், சாயரட்சை அர்த்தசாமம் ஆகிய ஏழு கால பூஜையும் பள்ளியறை முதலிய பூஜைகளும் நடந்து வருகிறது. ஆறு காலங்களிலும் திருமுழுக்கு நடைபெறுகிறது. எப்போதும் 108 அஷ்டோத்திரம், 1008சகஸ்ரநாமம் அர்ச்சனையும் 300 திரிசதை அர்ச்சனையும் சிறப்பாக நவராத்திரி விழாவில் பெருமானுக்கு பஞ்சமுகார்ச்சனையும் அம்பிகைக்கு நவாபரண பூஜையும் இலட்சனையும் நடந்து வருகின்றன.

இத்திருக்கோயிலில் ஆடித்தபசுத் திருவிழாவும், சித்திரைத்திருவிழாவும் மிகப்பெரிய திருவிழாக்கள், ஆடித்தபசுக் காட்சி பார்க்கவும் தை மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று ஆவுடைப் பொய்கையில் நடைபெறும் தெப்பத் திருவிழாவைப் பார்க்கவும், லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள். மேலும் வசந்தன் விழா, நவராத்திரி விழா, கந்தசஷ்டி விழா, மார்கழி திருவாதிரை விழா, தைப்பூச விழா, சமயாச்சாரியர் விழா ஆகிய திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. உத்தராயண, தெட்ணாயண காலங்களில் சூரியன் தனது சாயைகளுடன் வந்து சங்கரலிங்கப் பெருமானை பூசித்ததாகப் புராணம் கூறுகிறது. மார்ச் 21, 22, 23 செப்டம்பர் 21, 22, 23 நாட்களில் சூரிய ஒளி சங்கரலிங்க சுவாமி மீது பொலிவுடன் படுவதை இன்றும் காணலாம்.

**13. கோவிலினால் சமயம் சமுதாயம் கலை, பண்பாடு முதலிய துறைகளில் ஏற்பட்ட நன்மைகள்;**

சங்கரனார் தேர் மிகப் பெரியது. அம்மன் தேர் சற்று சிறியது. மிகவும் சிறப்பு வேலை

களுடன் கூடியது. தேரோட்டத்திற்குப் பல சமயத்தினரும் ஒன்று திரண்டு தேர் இழுப் பார்கள்.

இத்திருக்கோயிலிலிருந்து தாழ்த்தப் பட்ட சமயத்தினருக்கு இலவசமாகத் திருமணம் செய்யப்பட்டு வருகிறது.

இந்து சமயத்தை அபிவிருத்தி செய்ய சமயப் பேச்சாளர்களைக் கொண்டு மக்கள் கேட்டு பயன் பெற சமயச் சொற்பொழிவுகள் திருக்கோயிலில் நடைபெற்று வருகிறது. ஒவ் வொரு ஞாயிற்றுக் கிழமையும் திருக்குறள் சமயச் சொற்பொழிவு நடைபெற்று வரு கிறது. ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் திருப்பாவை திருவெம்பாவை பாடல் போட்டி நடத்தி குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டு வருகிறது.

இத்திருக்கோவிலிலிருந்து ஆரம்பப் பள்ளி ஒன்று நடத்தப்பட்டு அதில் பல இனத்தவரும் பயின்று வருகிறார்கள். மேலும் திருக்கோவிலி லிருந்து ஒரு இலவச சித்த மருத்துவமனை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. பல ஆயிரக் கணக்கான நோயாளிகள் இங்கு வந்து இலவச மாக மருந்து வாங்கிப் பயன் அடைகிறார்கள்.

**14. இதர விசேஷங்கள்** : சங்கரன் கோவிலில் இருந்த சங்கரநாராயணர் எழுந் திருத்து நாயகரை செண்பகக்கண்ணுப்பட்டர் என்பவர் திருடிக்கொண்டு போய்த் திருவுத்திர கோசமங்கையில் அடகு வைத்து விட்டார். சேதுபதி அத்திருவுருவை அக்கோயில் மூர்த்தி களுடன் வைத்துப் பூஜை புரிய ஆணை தந்த தனர். இதனை அறிந்த மேடை தளவாய் அழகப்ப முதலியார் அத்திருவுருவை மீட்டு வரும் வல்லமையுடையவர் பொன்னம்பலம் பிள்ளை ஒருவரே என உணர்ந்து அவரை அழைத்து வேண்டிக் கொண்டனர். பொன் னம்பலம் பிள்ளை சேதுபதியைப் பார்க்க முடி யாமல் காவடி எடுப்பவர் போலச் சென்று கண்டு கவி பாடினார். பொன்னம்பலம் பிள்ளையைப் பாராட்டி தம்முடன் சில நாள் சேதுபதி இருக்கச் செய்தார். அப்போது, பொன்னம்பலம்பிள்ளை சேதுபதி மன்னரிடம் கிள்ளாக்கைப் பெற்றுத் திருவுத்திரகோச மங்கை சென்று சங்கர நாராயணர் திருவுருவை கண்டு

''புற்றெங்கே! புன்னைவனமெங்கே!
பொற்கோயிற்
கற்றெங்கே! நாகசுனையெங்கே! இத்தனையும்
சேரத்தா னங்கிருக்கத் தேவநீதான் தனித்தித்
தூரத்தே வந்ததென்ன சொல்''

எனப் பாடினார். உடன் அப்பெருமான் தமக்கு மறுமொழி கூறியதாக அவரே பின்வரும் பாடலையும் பாடினார்.

'வில்லுவமே சீராசை வீடுவிட்டுக் காடுகளில்
நள்ளிருளில் செண்பகக்கண் நம்பியான்-
மெள்ளவே
ஆடெடுக்கும் கள்ளரைப்போல் அஞ்சாதெமை
கரிசற்
காடுதொறு மேயிழுத்தக் கால்?

இச்செய்தி யறிந்த சேதுபதி மகிழ்ந்து சங்கரநாராயணரைச் சங்கரன்கோவிலிற் சேர்த்து விடுவதாகக் கூறிப் பொன்னம்பலம் பிள்ளைக்கு வேண்டும் பரிசுகளை வழங்கி அத் திருவுருவத்தையும் அனுப்பியுதவினார்.

சங்கரநயினார் கோவில் சங்கரலிங்கர் உலா, சங்கரநயினார் கோவில் அந்தாதி, சங்கரலிங்கர் 'சதகம், கோமதியம்மைப் பிள்ளைத்தமிழ், சங்கர சதாசிவமாலை, சங்கர நயினார் கோயில் கோமதியம்மை தவமகிமை அம்மானை முதலிய பல நூல்கள் விளக்கு கின்றன. இவையன்றி முத்துவீரப்பக் கவிராயராலே பிள்ளைத் தமிழும் பாடல் பெற் றன. சித்தாந்த பண்டித பூஷணம் சிவஸ்ரீ ஈசுரமூர்த்திப் பிள்ளை இயற்றிய கோமதி சதரன்ன மாலை என்ற நூலும் உண்டு.

திருநெல்வேலி கெசட்டியர் என்றநூலில் திரு எச்.ஆர். பேட் ஐ.சி.எஸ். என்பவர் எழுதி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட நூலில் சங்கரநாராயணர் கோவிலைப்பற்றிய குறிப்புகள் உள்ளன.

திருவாவடுதுறை பத்தாவது குருமகா சன்னிதானமான வேலப்ப தேசிகரவர்கள் அருள்தரும் கோமதி அம்பிகையின் திருமுன்பு மந்திரச் சக்கரத்தைப் பதித்தருளினார். அச் சக்கரத்துக்குந கோமதி அம்மை தந்தருளிய வல்லமையினாலே இன்றும் அதனருகில்வரும் ஆடாதபேயும்ஆடுகின்றது. தீராத நோயும் தீர்ந்து போகின்றது.

சங்கரலிங்கப் பெருமானாருக்கு வன்மீக நாதர் என்ற பெயரும் உண்டு. வன்மீகம் என்பது புற்று. புற்றிலிருந்து தோன்றியபடி யால் சிவபெருமானுக்கு வன்மீக நாதர் என்ற பெயர் உண்டாயிற்று. சங்கரநாராயணர், கோமதி அம்பிகையின் காட்சிக்கு வந்த மூர்த்தி யாவார். சங்கரமூர்த்தி வாராசைநாதன். வைத்தியநாதன், சீராசை நாதன், புன்னை வனநாதன், கூழையாண்டி என்றும் கோமதி அம்பிகைக்கு ஆவுடையம்மை என்ற வேறு பெயரும் உண்டு. 'ஆ' என்பது பசு: ஆக்களை உடையாள் ஆவுடையாள், அவளே கோமதி யாள்.

இத்திருக்கோயிலில் வழங்கப்படும் புற்று மண் பிரசாதம் பிணிகளுக்கு அருமருந்தாகப் பயன்படுகிறது. இப்பிரசாதத்தால் வயிற்று நோய்களும் சரும நோய்களும் நீங்குகின்றது.

நாள்தோறும் நாட்டில் எல்லா பாதகத்தி லிருந்தும் இத்தலத்திற்கு திரள் திரளாக தரிச னத்திற்கு வந்து வழிபட்டு இப்பிரசாதத்தினை எடுத்துச் செல்கின்றார்கள்.

அனைவரும் அருள்மிகு சங்கரநாராயண னைத் தாசித்து, கோமதியம்பாளைத் தரி சித்துப் பலன் பெற வாரீர் வாரீர்.

# விநாயகரின் திருவிளையாடல்



**கணபதிப்பிரியா**

பிடியதனுரு வுமைகொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே
—திருஞானசம்பந்தர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை..
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே
—திருமூலர்.

நமது பரத கண்டத்தில் விநாயகர் வழிபாடு தொன்று தொட்டு இருந்து வருகிறது. நேபாளம், சீனம், திபெத்து, சையாம், ஜப்பான், சாவகம் (ஜாவா), கலிபோர்னியோ, பர்மா முதலிய நாடுகளிலும் கணேச வழிபாடு இருந்ததற்கு சான்றுகள் உள்ளன. சைவரேயன்றி வைணவரும், சமணரும், பௌத்தரும் இவரை வணங்குகின்றனர். ஆண்டுக்கொரு முறை இவருக்கு நாடு முழுமையும் விழாக் கொண்டாடப்படுகிறது. கோயில்களிலெல்லாம் விநாயகருக்குப் பூசை வழிபாடு சிறப்பாக நடைபெறும். மக்கள் விரதம் இருந்து வீட்டில் கணபதிக்குப் பூசனை புரிவர்.


விநாயகர், பார்வதி பரமசிவனுக்கு மான சீகபுத்திரர், ஓங்காரவுருவினர், யானைமுகம் தேவஉடல், பூதஅடிகள் உடையவர். ஒற்றைக் கொம்பர், இருசெவியினர், முக்கண்ணர், துதிக்கையுடன் ஐந்து கரத்தர், அங்குச பாசத்தர், ஆணுமல்லர், பெண்ணுமல்லர், அலியுமல்லர், பிறைசூடியவர், மும்மதத்தர், பெருச்சாளி வாகனர், விநாயகர் என்றால் தமக்கு மேல் நாயகர் அல்லது தலைவர் இல்லாதவர் என்று பொருள். இவரை வணங்கியேஎல்லாக்காரியங்களும் தொடங்குவது நம்நாட்டில் மரபு. அவர் நிகழ்த்திய அற்புதத் திருவிளையாடல்களைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**மாங்கனி பெற்றது :**
நாரதர், சிவபெருமான் திருமுன்னர் ஒரு கனியை வைத்தார். இருமருங்கிலுமிருந்த கணபதி, முருகன் இவர்களை நோக்கி 'உங்களில் எவர் முன்னர் உலகத்தைச் சுற்றி வருகிறார்களோ அவருக்கு இப்பழத்தைக் கொடுப்பேன் என்று சிவபெருமான் கூறினார். முருகன் மயில்மீதேறி உலகைச் சுற்றிவரச் சென்றார். விநாயகரோ தம் தாய் தந்தையரைச் சுற்றி வந்து நின்றார். பழத்தைப் பெற்றார். அகில உலகங்களெல்லாம் ஆண்டவன் உள் அடக்கம் என்ற உண்மையை இக்கதை விளக்குகிறது. நம்பியாண்டார் நம்பி, கபிலதேவர், அதிரா அடிகள் முதலியோர் இவ்வரலாற்றைத் தங்கள் பாடல்களில் கூறியிருக்கின்றனர்.

**முருகன் வள்ளியை மணக்க உதவியது :**
முருகப் பெருமான் தினைப்புனத்தில் காவலிருந்த வள்ளியை மணக்கத் திருவுளங்கொண்டார். கிழவேடத்தில் சென்றார். வள்ளி இசையவில்லை. தனது மூத்த சகோதரரை நினைத்தார். அவர் யானையாக வர, வள்ளி பயந்து குமரனை மணக்க இசைந்தாள். அருணகிரிநாதர், 'அத்துயரது கெட சுப்பிரமணிபடும் அப்புனம் அதனிடை இபமாகி, அக்குறமகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணமருள் பெருமாளே' என்று கூறியிருக்கிறார்.

**அச்சொடித்தது :** திரிபுரத்தை எரிக்கச் சிவபெருமான் தேர்மேலேறிப் புறப்பட்டார். எவரும் விநாயகரை நினைக்கவில்லை. அது கண்டு சினங்கொண்ட ஐங்கரன் தேரின் அச்சை ஒடித்தார். 'முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா' என்று திருப்புகழ்ப்பாடல் குறிக்கிறது. இந்த இடமே அச்சிறுப்பாக்கம் என்பர்.

**பாரதம் எழுதியது :** விநாயகப் பெருமான் தன்னுடைய ஒரு கொம்பை யொடித்துப் பாரதத்தை மேருமலையில்எழுதினார் என்பர். இதையும் அருணகிரியாரே 'முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே' என்று போற்றுகிறார். பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரும்,



“நீடாழி உலகத்து மறை நாலொ
டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசள்
மாபாரதம் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக அங்கூ
ரெழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப்
பணிந்தன்பு கூர்வாமரோ”

என்ற துதிப்பாடலுடன் நூலைத் தொடங்குகிறார்.

**காவிரியை உற்பத்தி செய்தது :** இந்திரன் நந்தவனம் வைத்தான். மழையின்மையால் பூச் செடிகள் வாடின. விநாயகப் பெருமானை வழிப்பட்டான். அவர் சையமலைக்குச் சென்று அங்கு அகத்திய முனிவர் ஆச்சிரமத்தை அடைந்தார். அவர் வைத்திருந்த கமண்ட நீரை ஒருகாக உருவத்தில்சென்று கவிழ்த்தார். அந்தநீர் ஒரு ஆறாகப் பெருகியது. காகம் விரித்தால் காவிரி என்ற' பெயர் ஏற்பட்டது. ‘அகத்தியன் தனது கரகம் கவித்த காவிரிப் பாவை’ என்று இச்செய்தியை மணிமேகலை குறிக்கிறது. சிவப்பிரகாச சுவாமிகள்

“‘கரகுலாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருகவார் கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணநாளும் தலைக்கணி’’ யாக்குவாம்

என்று பிரபுலிங்க லீலையின் காப்புச் செய்யுளில் சொல்லியிருக்கிறார்கள்.

இ ரா வ ண ன் தன் தாயார் பூசை செ ய் வ த ற் கா க க் கைலாசத்திலிருந்து ஒரு இலிங்கத்தைக் கொண்டு வந்தான். அவன் மாலைக்கடன்களைச் செய்யும் பொருட்டுத்தன் கையிலிருந்த இலிங்கத்தை அங்கு நின்ற சிறுவனிடம் கொடுத்தான். அச் சிறுவன் இராவணன் வருவதற்குள் இலிங் கத்தைக் கீழே வைத்து விட்டான். இராவணன் கோபங்கொண்டு சிறுவனைக்குட்டினார். இலிங் கத்தை பலம் கொண்டு எடுக்க முயற்சித்தான். முடியவில்லை. அதனால் அவருக்கு மகாபல லிங்கம் என்ற பெயரும் அவ்விடத்திற்குப் பூகைலாசம் என்றும் வழங்குகின்றது. இது திருகோக்கரணம் என்னும் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலம். மேற்குக் கடற்கரையில் வட கன்னடம் மாவட்டத்திலுள்ளது. சிறுவ னாக வந்தவரே விநாயகப் பெருமான். அவ ருடைய உருவம் இராவணன் குட்டிய அடை யாளத்துடன் திருக்கோகரணத்தில் இருக்கிறது. இராவணன் மாலைக் கடன் செய்த இடம் ஒரு தீர்த்தமாகவும் அங்கு திகழ்கிறது.

**திருவரங்கத்தில் பெருமானைக் கிடக்கச் செய்தது :** இராமர் சீதையை மீட்டுக்கொண்டு அயோத்தி சேர்ந்தார். விபீடணரும் உடன் சென்றார். இராமருக்கு முடிசூட்டு விழா நடந்தது. விபீடணர் இலங்கைக்குத் திரும்பும்போது இராமரிடம் திருமாலின் திருவுருவம் ஒன்றைப் பெற்றுப் புறப்பட்டார். திருவரங்கத்தை அடைந்தார். காலைக் கடன்களை முடிக்க எண்ணினார். அங்கு நின்ற இளைஞரிடம் அந்த திருவுருவத்தைக் கீழே வைக்காமலிருக்கும்படி சொல்லிகடன் முடிக்கப்போனார். சிறுவன் பெருமான் உருவத்தைக் கீழே வைத்துவிட்டான். வந்த விபீடணர் உருவத்தைஎடுக்க முயன்றார். இயலவில்லை. சிறுவனைத் துரத்தினார். அவன் ஓடிச் சென்று மலையுச்சியை அடைந்தான். உடனே விநாயகராக வீற்றிருந்தார். அவரே இப்போது உச்சிப் பிள்ளையார் என்று எல்லாராலும் போற்றப் படுகிறார்.

**ஔவையைக் கயிலை சேர்த்தது :** சேரமான்பெருமாள் நாயனார்குதிரையிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளையானையின் பேரிலும் திருக்கயிலாயத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர். தமிழ் மூதாட்டியான ஔவைப்பிராட்டி அவர்கள் இருவரும் கயிலைக்குப் புறப்பட்டுச் சென்றதை அறிந்து தானும் அங்குப் போய்ச் சேரவேண்டுமென்ற விருப்பத்தினால் விநாயகப் பெருமானுக்கு விரைவாகப் பூசையைச் செய்யத் தொடங்கினார். ஆனைமுகன் 'அம்மையே? நமக்கு நீ செய்யும் வழிபாட்டை அமைதியாக வழக்கம்போல் செய். சேரமான், சுந்தரர்க்கு முன் உன்னைக் கயிலைச் சேர்ப்போம்' என்று சொன்னார். மூதாட்டியாரும் முறைப்படி பூசையை நடத்தினார். உடனே மூத்த பிள்ளையார் துதிக்கையால் ஔவையாரைத் தூக்கி கயிலையில் சேர்த்தார். முன் புறப்பட்ட இருவருக்கும் முன்னே போயடைந்தார்.

**கணக்குப்பிள்ளையாகக் கடன் செய்தது :** முதலாம் இராஜேந்திரச்சோழன் கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரையமைத்து அதில் ஒரு சிவன் கோயிலையும் எடுப்பித்தான். தஞ்சை இராஜராஜேச்சரம் போலப் பெரியதாகக் கட்டினான். கட்டி முடித்ததும் ஒரு நாள் தன் அமைச்சரையழைத்து, கோயில் கட்ட. எவ்வளவு தொகை செலவாயிற்று என்று சோழ அரசன் கேட்டான். அரசாங்க கருவூலத்திலிருந்து ஏராளமான பணம் எடுத்துச் செலவு செய்யப்பட்டிருந்தமையின் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. மறுநாள் சொல்வதாக மன்னனிடம் கூறிச் சென்றார். விடிந்ததும் அரசனிடம் எப்படிக் கணக்குச் சொல்வது என்ற ஏக்கத்துடன் தன் வழிபடு கடவுளாகிய விநாயகரை நினைத்தார். பொழுது புலர்ந்தது. அமைச்சரிடம் வேலைபார்க்கும் கருவூலக் கணக்கப்பிள்ளை வந்தார். கோயில்கட்டிடச் செலவுக் கணக்குகளுடன் வந்திருப்பதாகச் சொல்ல இருவரும் அரசனிடம் சென்றனர். கோயில் கட்டிடச் செலவுக் கணக்கை எடுத்துக் கணக்கப்பிள்ளை படிக்கத் தொடங்கினார். 'எத்து நூல் எண்ணாயிரம் பொன்' என்றார். 'போதும்; நிறுத்தும்' என்றான் சோழப் பேரரசன். பெருங்கற்களை உடைப்பதற்கு முன் கல்தச்சர்கள் சாயம் நனைத்த கயிறுகளைக் கொண்டு கற்களின் மேல் அடையாளம் செய்து கொள்வார்கள். அந்தக் கயிற்றுக்கு எத்துநூல் என்று பெயர். எண்ணாயிரம் பொன்னுக்கு எத்து நூலே வாங்கப்பட்டது என்றால் கோயில் கட்டிமுடிக்க எவ்வளவோ பல இலட்சம் பொன்கள் ஆகியிருக்கவேண்டும் என்று ஊகித்த மன்னன் போதும் கணக்குப் படித்தது என்று நிறுத்தச் சொன்னான். அமைச்சரின் மனக்கவலையும் தீர்ந்தது. அப்படிக் கணக்கராக வந்தவர் விநாயகப் பெருமான்தான். இப்போது கங்கைகொண்ட சோழபுரத்தில் கணக்கு விநாயகர் என்ற பேருடன் விளங்குகிறார்.

**படைத்த உணவை உண்டது :** திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரைப் பூசனை புரியும் அந்தணர் வேற்றூர் செல்ல நேர்ந்தது. தன் மகனை அழைத்து வழக்கப்படிப் பூசையை செய்யச் சொல்லிச் சென்றார். மறைச் சிறுவனும் நைவேத்தியத்துடன் சென்று பிள்ளையார் முன் படைத்து ஆராதனை செய்துமுடித்தான். விநாயகர் அமுதை அருந்துவார் என்று நினைத்துக் காத்திருந்தான் இளைஞன் ஒன்றும் நடைபெறவில்லை. உணவை உண்ணாவிட்டால் மண்டையை மோதிக் கொள்வதாகச் சொல்லி முறையிட்டான். அவ்வளவில் ஆனைமுகன் துதிக்கையால் அமுதை அருந்தி சிறுவனின் விருப்பத்தை முடித்தார். அந்த பிராமணக் குழந்தையே நம்பியாண்டார் நம்பி என்ற திருமுறை ஆசிரியர்.

**கண் கொடுத்தது** திருவாசகத்தை அருளிய மணிவாசகப் பெருமான் அவதரித்தது திருவாதவூர் என்றதலம். மாணிக்கவாசகரின் தாய் தந்தையர்க்கு வயது முதிர்ச்சியால் கண்ணொளி மழுங்கிற்று. அவ்வூரிலுள்ள விநாயகரை நாள்தோறும் தவறாமல் வழிபட்டனர். கணபதியருளால் மீண்டும் கண்பார்வை பெற்றனர். அவருக்கு முழிச்சிப் பிள்ளையார் என்று பெயர். திருவாதவூர் ஏரிக்கரையருகே அவருடைய கோயில் இருக்கிறது.

மாயூரம் என வழங்கும் திருமயிலாடுதுறையில் கண் ஒளி இழந்த ஒருவர் ஐங்கரனை வழிபட்டுக் கண் பார்வையடைந்தார். ஆனைமுகனுக்கு ஒரு கோயிலும் கட்டப்பட்டது. அதற்குக்கண் கொடுத்த பிள்ளையார் கோயில் என்று இன்றும் பெயர் வழங்கி வருகிறது.

விநாயகரின் திருவிளையாடல்களைப் பற்றி நாட்டில் இன்னும் பல கதைகள் வழங்குகின்றன. முக்கியமான சிலவற்றை மட்டும் மேலே கண்டோம்.

''அல்லல்போம் வல்வினைபோம் அன்னை
வயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்-நல்ல
குணமதிகமாம் அருணைக் கோபுரத் துள்மேவு
கணபதியைக் கைதொழு தக்கால்''.

# ஆடல்



# காணீரோ...!

**கம்பன் கவிநயமணி**

**வே. தியாகராஜன்**

## (30)

செயற்கரிய செயல்களைச் செய்து இறைவனையடைந்தவர்கள் நம் முன்னோர்கள். தானே செயற்கரிய செயல்களாக குதிரைச் சேவகனாகவும் பிட்டிற்காக மண் சுமப்பவனாகவும் வந்து பிரம்படிப்பட்டு மாணிக்க வாசகருக்கு இறைவன் அருள் புரிந்தான்; என்றால் அந்த அடியாரின் பெருமையை எங்ஙனம் கூற முடியும்?

மதுரையில் ஓடும் வைகை நதி, சிவபெருமானுக்கு நஞ்சையளித்த பாவி என்ற காரணமாகக் கடலை வெறுத்து வேறிடத்தில் சங்கமமாகியது என்பர். தனிப் பாடலில் 'நாரியிட பாகருக்கு நஞ்சளித்த பாவி என்று வாரியிடம் புகாத வையையே' என்று சிறப்பிப்பார். பரஞ்சோதி முனிவரோ, வைகை நதியை, வறுமை கண்டு இரங்கி தானம் வழங்கும் நல்லோரைப் போல, உலகிற்கு தானியம் வழங்கும் வயல்களையும், உலகத்திற்குத் தண்ணீரைக் கொடுக்கும் குளங்களையும் நிரப்பியது. உப்புத் தண்ணீரை உடைய கடல் ஒருவருக்குமே உதவாது என்பதை அறிந்த வைகை கடலில் விழவில்லை எனக் கூறுகிறார்.

'தொடுத்த வறுமையும் பயனும் தூக்கி
வழங்குநர் போல்
அடுத்த வயல் குளம் நிரப்பி அறம் பெருக்கி
அவனி எல்லாம்
உடுத்தகடல் ஒருவருக்கும்உதவாத உபரியென
மடுத்தறியா புனல்வைகைக் கரையுளது
வாதவூர்.'

உலகிற்கு நன்மையை எண்ணும் வைகை நதியின் கரையில், உலகத்திற்குத் தன் அன்பின் காரணமாக திருவாசகம் எழுதிய மாணிக்க வாசகர் பிறந்த வாதவூர் அமைந்திருந்தது எனச் சமத்காரமாக குறிப்பிடப் பெறுகிறது.

வாதவூரிலே அமாத்தியார் குலத்திலே, புத்த இருள் நீக்கப் பிறந்த சூரியன் போன்றவருக்கு வாதவூரர் எனப் பெயரிட்டனர். தாயின் குடலை விளக்க வந்து அவதரித்த அப்பெருமான் சைவத்தையும் தழைக்கச் செய்ததுடன், தான் பிறந்த ஊரும் விளக்கம் பெற எண்ணி, 'வாதவூரர்' எனப் பிள்ளைத் திருநாமம் ஏற்றனர் போலும். அவ்வாறு தோன்றிய அப்பெருமகனார் பதினாறு வயதிற்குள்ளும் அறுபத்து நான்கு கலைகளிலும் சேர்ந்து விளங்கினார், அறிவு என்பது ஒரு தனிமனிதனின்சொத்தல்ல, எங்கு அறிவுடையவர் தோன்றினாலும் அவரது அறிவு மனித குலத்திற்கே சொந்தம். நாட்டு மக்களுடைய நன்மைக்கே பயன்பட வேண்டுமென்பது குறிப்பு, வாதவூரரின் அறிவுச் செல்வத்தை நாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ள எண்ணிய பாண்டியன் அவரை மந்திரியாக்கினான்.

'இத்தகையோர் நிகழ் செய்தி அறிந்தவர்
சென்று இயம்பஅரி
மர்த்தன பாண்டியன் கேட்டு வரவழைத்து
மற்றவரைச்
சித்த மகிழ் வரிசையினால் சிறப்பளித்துத் தன்
கோயில்
வித்தக நல்மதியமைச்சின் தொழில் பூட்டி
மேம்ப டுத்தான்.''

மந்திரி பதவியை அடைவதால் சிலர் சிறப்படைவார். ஆனால் மந்திரி பதவியை சிறப்பித்தார் வாதவூரார். மந்திரியானபின் அவருக்குத் தென்னவன் பிரமராயன் எனப் பெயரிடப்பட்டது. அரசனுக்கு நன்மையுண்டாகும் வகையிலே வாதவூரர் அரசு நடத்தினார். எந்நேரமும் சிவ சிந்தனையிலேயே ஊறி பாசம் நீங்கி பதியான இறைவனை பசுவாகிற தான் அடைவது எங்ஙனம் என ஆராய்ந்து கொண்டே இருந்தார்.

ஒரு பெண் ஒரு இளைஞனைக் கண்டு ஆசை கொண்டாள். அவளுடைய பெற்றோர் அவளுடைய ஆசைக்கு எதிராக, வேறு ஒருவனுக்கு மணமுடித்து வைத்தனர். அந்தப் பெண் தன்னை மணந்து கொண்ட நாயகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை வழுவாது செய்த போதிலும், தனது மனத்தை மாத்திரம் தான் ஆசை கொண்டிருந்த காதலன் மீது செலுத்தினாள், அதுபோல், உடலளவில் அரசனின் மந்திரியாக விளங்கிய வாதவூரர், மனத்தை இறைவனிடம் வைத்திருந்தார்.


‘கள்ளக் காதலனிடத் தன்பு கலந்து வைத்
தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தை போல் உம்பரைக்
காப்பான்
பள்ளக் காரியுண்டவனிடத்து உள்ளன்பு
பதித்துக்
கொள்ளக் காவலனிடத்துப் புறத் தொழிலு
முட்கொண்டார்’

(ஒரு அரசைக் காக்கும் மன்னனிடம் உள்ளன்பு வைக்காது உலகத்தையே காக்கும் இறைவனிடம் அன்பு வைத்தார் என்பது குறிப்பு)

ஒரு தினம் குதிரைலாயத்துக்காவலாளிகள் அரசனிடம் வந்து ‘மகாராஜா? நம் குதிரைகளில், இறந்து போனவை நீங்க, பாக்கியுள்ளவைகள் நோயுள்ளவைகளாகவும் மிக மூப்படைந்தவைகளாகவும் உள்ளன. ஒன்றுகூடச் சரியாக இல்லை’ என்றனர். பாண்டியனும் வாதவூர் வள்ளலை ‘நோக்கி’ நமது பொக்கிஷத்திலிருந்து வேண்டிய பணமெடுத்துக் கொண்டு திருப்பெருந்துறை சென்று நல்ல குதிரைகள் வாங்கி வருக’ எனக் கட்டளையிட்டனர். பிறர் பணமாக இருந்த போதிலும் நல்ல காரியங்களுக்கு வரையாது கொடுத்தமையால் ‘வள்ளல்’ எனக் குறித்தார். நிறையப் பொருள் எடுத்துக் கொண்ட வாதவூரர் ஒட்டகங்களில் ஏற்றி அவற்றைத் திருப்பெருந்துறைக்கு அனுப்பிவிட்டு, ஊரைவிட்டுப் புறப்படுமுன் இறைவனது திருக்கோயிலை அடைந்தார். பழைய காலத்தில் கோயிலுக்குச் சென்று ‘இறைவனே வேற்றூர் செல்கிறேன் உன் அருளால் வெற்றியுடன் திரும்ப வேணும்’ என வேண்டிச் செல்வர், ஊர் திரும்பியதும் ‘உன்னருளால் என் அலுவல் இனிது முடிந்து ஊர் திரும்பினேன்’ எனக் கோயிலை யடைந்து வணங்குவர்.

(தற்காலம் ஊரைவிட்டுப் புறப்படுமுன் சினிமா செல்லுவர். வெளியூர் சென்று திரும்புவதற்கு முன் படம் மாறிவிட்டால் என்ன செய்வது என்ற ஏக்கம்? ஊர் திரும்பியதும் உற்றார் உறவினர் நலம் பற்றி விசாரியாமல் ‘என்ன படம் நடை பெறுகிறது? எனக் கேட்கின்றனர். அந்தோ பரிதாபம்? கடவுளுக்கு வைக்கும் மரியாதையைக் கலை என்ற பெயரால் நடைபெறும் கீழ்த்தரமான காட்சிகளுக்கு வைத்துள்ளனர். இறையருளால் இந்த மனோபாவம் மாறட்டும். கோயிலையடைந்து கருணை நாயகியான மீனாட்சியம்மையை வணங்கி, வருணனின் வயிற்றுநோயைநீக்கி ஆட்கொண்ட ஆலவாயப்பனைத் தரிசித்து, ‘இறைவனே! அரசன் குதிரை வாங்குவதற்காக அளித்துள்ள பொருளெல்லாம் உனக்கும் உன் அடியாருக்கும் சிலவு செய்யும் பேற்றை அருள வேண்டும்’ எனக் கரங்குவித்து வேண்டினார்.

‘ஒன்று வேண்டும் இப்பொருளெலாம்உனக்கும்
ஐம்பொறியும்
வென்று வேண்டும் நின் அன்பர்க்கும் ஆக்குக!
வெள்ளி
மன்று நின்றாடிய வள்ளல் என் குறை ஈது
என்று வேண்டி நின்று ஏத்துவர்க்கு இறைவன்
இன்னருள்போல்’



அரசனுடைய பணத்தை எடுத்து வாதவூரர் அவசரப்பட்டுச் சிலவு செய்து விடவில்லை. இறைவனிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். எனவே இவருக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டாலும் இறைவன் அவருக்குத் துணை புரிவார் என்பது நிச்சயமன்றோ?

அவ்வாறு வாதவூரர் வேண்டி நின்ற அதே நேரத்தில் கோயில்அருச்சகர் திருநீறளித்தனர். ‘இது இறைவன் நமக்கு அளித்த உத்தரவிற்கான சகுனம்’ என எண்ணி திருநீற்றை இருகையாலும் ஏற்றுக் கொண்டனர். திருநீற்றை எவ்வாறு ஏற்க வேண்டும்! மரியாதையும் பத்தியும் காட்டவேண்டும் என்பதைப் பரஞ்சோதி நமக்கு இதில் அறிவிக்கிறார்.

‘‘ஆதிசைவனாம் அருச்சகன் ஒருவன் நேர்
அணைந்து
பூதி ஈந்தனன் நமக்கு இதுபோல் இல்லை
நிமித்தம்
ஈது நன்னெறிக்கு ஏது என்று இருகை ஏற்று
அணிந்து
வேதநாயகனை இறைஞ்சினார் விடை
கொண்டு மீண்டார்’.

இறைவனிடம் தன் கருத்தைக் கூறி விடை பெற்றுச் சென்ற வாதவூரர் காட்டிய வழியில் நாமும் நடக்க அவர் அருளை வேண்டுவோமாக.

மதுரை நாயகனிடம் வணங்கி விடை பெற்ற வாதவூரர் திருப்பெருந்துறை நோக்கி வருகிறார். எளியவர்களை வலிய வந்து ஆட்கொள்ளுவது தானே இறைவனின் கருணை!

—(தொடரும்)

# தெய்வத்துணை

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

கானகத்தில் ஒரு சந்யாசி நெடுங்கால மாகத் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் சிறந்த ஒழுக்கமும் உயர்குண நலனும் உடைய வர். ஒருமைப்பட்ட மனத்துடன் புலன்களை வென்று தவவேந்தராக அவர் திகழ்ந்தார். கானகத்தில் வாழும் கொடிய விலங்கினங்களும் அவரிடம் குழந்தைகள்போல் அடங்கி அன்பு செய்தன.

அம்முனிவர் பெருமான், பச்சிலைகளை யும், உலர்ந்த சருகுகளையும், கிழங்குகளையும் நீரையும் உணவாகக் கொண்டு உடம்பை வாட்டி, வினைகளை வீட்டித் தவசீலராகத் திகழ்ந்தார்.

ஒருநாள் அவர்முன் மகாலட்சுமி தேவி தோன்றி காட்சியளித்தனர். முனிவர் திரு மகளைத் தொழுதார்.

''முனீந்திரா! நீ முன்னே செய்த நல் வினைப் பயன் காரணமாக சில நாள் நான் உன்னிடம் தங்கியிருக்கப் போகிறேன்.''

''தாயே! நான் தவத்தையே தனமாகக் கொண்டவன். வெறுக்கை (செல்வம்) மீது வெறுக்கையுற்றவன். உமது கருணையும் அதனால் வரும் செல்வமும் நாட்டில் இல்லறத் தாருக்கல்லவா வேண்டும். என்னிடம் நீ இருந்து பயனில்லையே''.

''தபோதனரே! இப்போது உனக்கு செல் வம் வேண்டாம் என்றிருக்கலாம். முன்னே நீ செய்த புண்ணியத்தின் பயனாக உன்னிடம் குறிப்பிட்ட ஒரு காலம் வரை இருக்கத்தான் வேணும். இது இறைவனுடைய அருளாணை யின் நியதி. நான் உன்னிடம் இருக்கும்போது உனக்கு எல்லாம் நன்மையாகத்தான் முடியும். ஒரு பயமும் வராது. உனக்கு சகல சித்திகளும் உண்டாகும். அரச மரியாதைகள் கிடைக்கும். உலக மக்கள் மதித்துக் கொண்டாடி உபசரிப் பார்கள்' என்றாள்.

முனிவர் 'அம்மா! எல்லாம் ஈசன் செயல். உன் கருணாகடாட்சப்படி நடக்கட்டும்' என் றார்.

அவரிடம் லட்சுமியின் பரிபூரண அருள் பதிந்தது.

முனிவர் நீராடித் திரும்பும் வழியில் ஒரு பெரும் புதையல் வெளிப்பட்டது. அதில் தங்கப் பவுன்கள் நிறைந்திருந்தன. லட்சுமி கடாட்சம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அவருடைய காலடியில் அது வந்தது. அவரோ ஆசாபாசம் விட்டவர், அதைக் கண்டு சிரித் தார். தேவி! இது எனக்கு ஏன்? தலைமயிர் இல்லாதவருக்கு மலர்ச் செண்டால் என்ன பயன்? தவஞ் செய்கின்ற எனக்கு இப்பணம் எதற்கு? என்று கூறி அதனைத் தீண்டாமலே தான் தவஞ் செய்யும் மரத்தடியடைந்தார்.

மறுநாள் முனிவர் 'நம்மிடம் திருமகள் தங்கியிருக்கின்றாளே? அரச மரியாதை கிடைக் கும் என்றாளே? இதைச் சோதித்துப் பார்ப் போம்' என்று எண்ணினார்.

அந்தக் காட்டுக்கு அருகில் இராஜசேகரம் என்ற ஒரு நகரம். அதனைப் பராந்தகன் என்ற அரசன் அரசு புரிந்து வந்தான். முனிவர் அர சவை சென்றார். பெரிய மண்டபம்; அமைச் சர்கள், பிரதானியர்கள், ஏனைய பரிசனங்கள் புடை சூழ மன்னர் பெருமான் அரியணை மீது அமர்ந்திருந்தான். முனிவரைக் கண்டு எழுந்து எதிர்வந்து தொழுதான்.

முனிவர் அம்மன்னவன் தலையில் இருந்த மணிமகுடத்தைக் காலால் உதைத்தார். (லட்சுமி தேவியின் சொல்லை சோதிக்குமாறு இவ்வாறு செய்தார்).

சபையில் உள்ளவர்கள் ஆ! ஆ! என்று அலறினார்கள். அமைச்சர்கள் திடுக்கிட் டார்கள். மன்னவன் மனம் பதறியது. அந்த ஒரு கணத்தில் அந்த சபையே ஆடிவிட்டது; முனிவருக்கு என்ன ஆபத்து வருமோ என்று எல்லோரும் எண்ணினார்கள்.

இலட்சுமிதேவி முனிவருடைய நடையை நோக்கிப் புன்னகை புரிந்தாள். இந்த முனிவ னிடம் நாம் அருள் புரிந்தால் இவன் வெறி பிடித்தவன்போல் இப்படி மன்னவனுடைய மணி மகுடத்தை உதைத்தானே என்று கருதி னாள். உடனே திருமகள் அருளால் அந்தக் கிரீடத்திலிருந்து ஒரு நாகப்பாம்பு வெளிவந்து படம் எடுத்து ஆடியது. இதைக் கண்ட அரச னும் அவையோரும் அதி அற்புதங் கொண் டார்கள். ஆ! முனிவர் பெருமான் திரிகால ஞானி. நமக்கு வர இருந்த இடரைக் கருணை யினால் தவிர்த்தருளினார்.

இந்தப் பாம்பு முடிக்குள் நுழைந்திருக்க வேண்டும். நான் இதை அறியாமல் எடுத்துத் தலையில் அணிந்து கொண்டேன். ஆ! இந்தப் பாம்பு கடித்திருந்தால் நான் மாண்டுபோவேன்.



இதைக் கானகத்தில் தவஞ்செய்யும் இவர் யோகக் காட்சியால் கண்டு, நாகப்பாம்புகடித்து அதனால் நான் மாளாது வாழும்பொருட்டு என்னைக் காத்தருளவே தேடி வந்து உதவி செய்தார் என்று மன்னவன் நினைத்தான்.

மாதவ முனிவருடைய மலரடி மீது பல முறை வீழ்ந்து வணங்கினான். ‘சிறியேனை வாழ வைத்த தெய்வமே! என் இடர் களைந்த எந்தை பெருமானே! குடிமுழுதாண்ட குரு மணியே! தங்குட்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன். தேவரீரை என் உயிருள்ள வரை பூசிப்பேன். நேசிப்பேன்’ என்றெல்லாம் துதித்தான். எல்லோரும் அவருடைய அடிமலர் மீது வீழ்ந்து தொழுதார்கள்.

அவரைப் புஷ்ப ரதத்தின்மீது ஏற்றி குடை, சாமரம், ஆலவட்டம் முதலிய உபசாரங்களுடன் மேள தாளங்கள் முழங்க விண்ணுலகம் அதிருமாறு, வாண வேடிக்கையுடன் ஊர்வலம் செய்தார்கள்.

முனிவர் சிந்திக்கின்றார். இது என்ன விந்தை. ஒரு விநாடியில் நமக்கு இத்துணைச் சிறப்பும் இராஜ மரியாதையும் நகர்வலமும் நடைபெறுகின்றன. மன்னவனைக் காலால் உதைத்தேன். என் காலை வெட்டித் தண்டிக்க வேண்டிய மன்னன் காலில் வீழ்ந்து அடிமையாகி நிற்கின்றான். இது திருமகள் அநுக்கிரகம். முடியிலிருந்து அவள் சர்ப்பமாக வந்து இத்தனைக் கூத்தும் புரிவிக்கின்றாள். அவள் இன்னும் என்ன என்ன திருவிளையாடல் செய்யப் போகின்றாளோ! என்று எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

அரண்மனைக்கு அருகில் உள்ள பூங்காவனத்துக்கு இடையில் கட்டியுள்ள சந்தன மாளிகையில் முனிவரைப் புதிய வெல்வெட்டு விரித்த ஆசனத்தில் அமர வைத்து மன்னன், மன்னனுடைய மனைவி, மகள் முதலியோர் மயில் விசிறி எடுத்து விசிறி பால், பழம், தேன், இளநீர் தந்து உபசரிக்கின்றார்கள். அதல பாதாளத்தில் இருந்த ஒருவனை இமயமலையின் உச்சியில் அமர்த்தியது போல் இருந்தது. காட்டில் தனித்துப் போற்றுவார் ஒருவருமின்றி காய், சருகு உண்டிருந்த முனிவர் இன்று இராஜோபசாரத்துடன் தங்கப்பிடியிட்ட வெண்சாமரம் மன்னவனே வீச, பஞ்சுமெத்தையிட்ட தந்தக் கட்டிலில் வீற்றிருக்கின்றார்.

இப்படி சில தினங்கள் கழிந்தன. முனிவர் முடிமன்னனை நோக்கித் தான் கானகம் போக வேணும் என்றார். மன்னவன் மறுத்து ‘தேவரீர் இங்ஙனமே இருந்து எங்களை உய்விக்க வேண்டும்’ என்றான்.

முனிவர் மீளவும் இலட்சுமின் கருணையின் வலிமையைச் சோதிக்க நினைத்தார்.

நடு இரவு, அரசனும் அரசமாதேவியும் ஒரு கட்டிடத்துக்குள் பஞ்ச சயனத்தின் மீது பள்ளிகொண்டு உறங்கிக்கொண்டிருந்தார்கள். முனிவர் அந்த படுக்கை வீட்டுக்குள் நுழைந்து மன்னவன் முதுகிலும், மகாராணியின் முதுகிலும் பளார், பளார் என்று நான்கு அடி கொடுத்து, இருவருடைய கரங்களைப் பிடித்து கரகர என்று மாடுகளை இழுத்து வருவதுபோல் இழுத்துக்கொண்டு வெளியே வந்தார். இது எத்துணை அடாத செயல், அரசருடைய படுக்

கையறையில் மற்றவர் நுழையலாமா? கோப்பெருந்தேவியை மற்றவர் தீண்டலாமா? தீண்டி அடிக்கலாமா? தலை போகின்ற காரியம்.

மன்னவன் இன்னதென் றறியாமல் திகைத்து நின்றான். இலக்குமிதேவி திடுக்கிட்டாள். தவ முனிவர் திடீர் என்று இந்தஅடாத செயலைச் செய்து நம்மைச் சோதிக்கின்றாரே? நாம் அவரிடம் தங்கியிருக்கின்றபோது அவருக்கு ஒரு அவமரியாதை வரக்கூடாதே என்று எண்ணினாள். உடனே திருமகள் செயலால் அரசன் படுத்திருந்த கட்டிடம் திடீர் திடீர் என்று இடிந்து விழுந்தது. இதைக் கண்ட மன்னவன் ஆ! ஆ! நான் இதன் உள்ளேபடுத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தேனே! கட்டிடம் இடியப் போவதை அறிவுக் கண்ணால் அறிந்த அருந்தவ முனிவர் என்னைக் காக்குங் கருணையால் இங்ஙனஞ் செய்தனர். இல்லையேல் நானும் என் தருமப் பத்தினியும் மாண்டு ஒழிந்திருப்போம். இப்பேராபத்திலிருந்து என்னைக் கருணை மேலீட்டினால் காத்தருளினார்.

'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது'

இந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகுமா? வாழ் நாள் முழுவதும் நாம் இவருக்கு மீளா அடிமையாகி வாழ்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்' என்று எண்ணிப் பராந்தகன் மாதவருடைய மலரடியைப் பலகாலும் பணிந்து எழுந்தான்; கண்ணீரால் அவருடைய கால்களைக் கழுவினான்.

இச்செயலைக்கண்ட முனிவருக்கு அதி ஆச்சரியம் ஏற்பட்டது. திருமகளின்கருணைத் திறத்தை நினைந்து நினைந்து விம்மிதம் அடைந்தார். கமலாசனியின் கருணையின் வலிமைதான் என்னே! உலகமெல்லாம் இறைஞ்சும் இந்தக் கோமானை கோவணாண்டியின் கால்மேல் வீழ்ந்து வணங்குமாறு செய்கின்றாள். தேவியின் பெருமையே பெருமை. அவளின் அருளிருந்தால் துரும்பும் அரசு புரியுமே! அம்மம்மா! நினைக்கவும் முடியாத அற்புதம். செய்யத் தகாத செயலைச் செய்த எனக்குச் சிறப்பின் சிகரம் சேர்கின்றது என்று சிந்தித்தார். தேவியை வந்தித்தார்.

இவ்வாறு முனிவர் சில காலம் அரச மரியாதைகளுடன் மிக உயர்ந்த சுகாசனங்களில் அமர்ந்து எல்லோருடைய வணக்கங்களுக்கும் உரியராய் விளங்கினார்.

ஒருநாள் இரவு இலட்சுமிதேவி அவருடைய கனவில் தோன்றி 'முனிவரே, நான் நாளைகாலை உம்மைவிட்டு அகலுவேன். இனி உமக்கு இங்கு ஒரு உபசாரமும் நடவாது' என்று கூறி மறைந்தாள். முனிவர் எழுந்தார். திருமகள் விலகிவிட்டாள் என்பதை உணர்ந்தார்.

முனிவர் முதல்நாள் மன்னவன்பால் கொடுத்த மாம்பழத்தை வெட்டிக் காலையில் மன்னன் ஒரு துண்டை உண்டான். உடனே விழுந்தான். அரச வைத்தியர்கள் வந்தார்கள். அம்மாம்பழத்தில் நஞ்சு கலந்திருக்கின்றதென அறிந்தார்கள். நஞ்சு தணியும் நன்மருந்தை நல்கினார். பராந்தகன் குணமடைந்தான்.

அக் கனி அரண்மனை நந்தவனத்தில் பழுத்தது. அது மரத்தில் இருக்கும்போது நல்ல நாகம் அதில் நஞ்சைக் கக்கியிருந்தது. முனிவர் இக்கனி நஞ்சு கலந்ததென்பதை அறியாது மன்னனிடம் முதல்நாள் மாலை தந்தார்.

மன்னவன் 'ஓ'? இந்த முனிவர் இப்பழத்தில் நஞ்சூட்டி நம்மைக் கொன்று அரசுரிமையைக் கைப்பற்றக் கருதினார் போலும். இவரை கொல்வது நல்லதன்று, முன் இருமுறை நம் மரணத்தைத் தடுத்து உதவி செய்தவர்.

''கொன்றன்ன இன்னா செயினும் அவர்
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.'' [செய்த

ஆதலால் இவருடன் இனி பழகக் கூடாது என்று தன் மனதுக்குள் நினைத்து, தன் ஏவலரிடம் முனிவரை யாதொரு இடையூறும் இன்றி காட்டில் விட்டு வருமாறு கட்டளையிட்டான்.

காவலர் முனிவரை அழைத்துப்போய் கானகத்தில் விடுத்து 'முனிவரே! எமது மன்னரைக் கொல்லுமாறு நீர் நஞ்சு கலந்த கனியை தந்த காரணத்தால் உம்மை மன்னர் அகற்றி விட்டார். இனி நகருக்குள் வராதீர்; வந்தால் தலை போகும்' என்று கூறிச் சென்றார்கள்.

முனிவருக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'ஆ! திருமகள் செய்யும் திருவிளையாடல்தான் என்னே? அவள் விலகிய அடுத்த கணத்தில் எனக்கு அரச மாளிகையில் இடமில்லை. அன்றியும் அரசனுடைய வெறுப்பும் ஏற்பட்டது. திருமகள் கடாட்சம் இருந்தால் தீமையும் நன்மையாகும். அவளுடைய கடாட்சம் இல்லையேல் நன்மையும் தீமையாக முடியும். நான் தந்த மாம்பழமே நஞ்சாக மாறி எனக்கு இந்த நிலையமைந்தது. நான் சுகத்தை விரும்பாதவன். துக்கத்தை வரவேற்கின்றவன். சாமானியமான மனிதர்கள் என்றால் கதி கலங்கி, மதி மயங்கி அதிக வேதனை அடைவார்கள். நேற்று அரச போகம். இன்று காட்டில் நிற்கும் யோகம். தேவி? நின் திருக்கூத்தையறிந்தேன். சிலகாலம் என்பால் தங்கி வேண்டாம் என்ற உயர்ந்த சிறப்பையெல்லாம் எனக்கு வலிதில் தந்து விளையாடினாய், அம்மா? நீ ஆண்டியை அரசனாக்குவாய்; அரசனை ஆண்டியாக்குவாய். துரும்பை இரும்பாக்குவாய்; இரும்பைத் துரும்பாக்குவாய், குட்டிச் சுவரை அரண்மனையாகச் செய்வாய். அரண்மனையைக் குட்டிச் சுவராக்குவாய். உன்னால் எல்லாம் ஆகும். தாயே? உனக்கு வணக்கம்' என்று தேவியைத் தொழுதுவிட்டு, எப்போதும்போல் மனத்தையடக்கித் தவஞ் செய்யத் தொடங்கினார்.

# திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதி ஒதுக்கீடு



தமிழ்நாட்டில் உள்ள 23 கோவில்களின் திருப்பணிக்கு, ரூ. 1 கோடியே 70 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதல்-அமைச்சர் புரட்சித்தலைவி ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டு இருக்கிறார்கள்.

அத்திருக்கோயில்களின் விவரம் பின் வருமாறு:

1. நாறும்பூநாதசுவாமி கோவில், திருப்புடைமருதூர், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

2. பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோவில், கரூர், திருச்சி மாவட்டம்.

3. ராஜகோபாலசுவாமி கோவில், மன்னார்குடி, நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம்.

4. சுப்பிரமணியசுவாமி கோவில், எட்டுக்குடி, நாகப்பட்டினம் .- காயிதே மில்லத் மாவட்டம்.

5. மகாலட்சுமி கோவில், (அஷ்டலட்சுமி கோவில்), பெசன்ட்நகர், சென்னை.

6. காளியம்மன் கோவில், செங்கம் தாலுகா திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.

7. வேணுகோபால சுவாமி கோவில், சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்.

8. சுவாமிநாதசுவாமி கோவில், சுவாமி மலை, தஞ்சாவூர்.

9. கள்ளழகர் கோவில், அழகர் கோவில் மதுரை மாவட்டம்.

10. நாகப்ப செட்டி பிள்ளையார் கோவில், தம்புசெட்டித் தெரு, மண்ணடி சென்னை.

11, கபாலீசுவரர் கோவில், மயிலாப்பூர், சென்னை.

12. மருந்தீசுவரர் கோவில், திருவான்மியூர், சென்னை.

13. ராமநாதசுவாமி கோவில், ராமேசுவரம், ராமநாதபுரம் மாவட்டம்.

14. தேவி கருமாரியம்மன் கோவில், திருவேற்காடு, சென்னை.

15. வலம்புரிநாத சுவாமி கோவில், திருவலம்புறம், நாகப்பட்டினம், காயிதே மில்லத் மாவட்டம்.

16. கள்ளபிரான் சுவாமி கோவில், ஸ்ரீவைகுண்டம், சிதம்பரனார் மாவட்டம்.

17, கோட்டை மாரியம்மன் கோவில், திண்டுக்கல், திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

18. பார்த்தசாரதி சுவாமி கோவில், திருவல்லிக்கேணி, சென்னை.

19. திருவாலீசுவரர் கோவில், பாடி சென்னை.

20. மாரியம்மன் கோவில், இருக்கன்குடி காமராஜர் மாவட்டம்.

21, பவானியம்மன் கோவில், பெரிய பாளையம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

22. பண்ணாரி மாரியம்மன் கோவில், சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்.


23. பகவதியம்மன் கோவில், மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம்.

---

## அறநிலையத்துறைக்குப் புதிய ஆணையாளர்

திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் நம் அறநிலையத் துறையின் புதிய ஆணையாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள். இப்பொறுப்பிற்கு வருவதற்கு முன் இவர் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளராக விளங்கினார்கள் என்பது குறிப்பிடத் தக்கது,

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு வெ. நடேசன்பால்ராஜ் அவர்கள்
சுதந்திரத் திருநாள் அன்று மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில்
நடைபெற்ற பொது விருந்து மற்றும் சிறப்பு வழிபாட்டு நிகழ்ச்சியில்
கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பதிவு எண், எம். 7039



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்
திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜப் பெருமான்
ஆலயத்திற்கு வருகை தந்து, அருள்மிகு
வடிவுடையம்மனுக்கு விசேட வழிபாடுகள்
நிகழ்த்தினார்கள்.